(11)

Reg. No. M. 1482.

ஸமரஸ போதினி.

The "Samarasabodhini"-A Tamil Weekly

"தேரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

இ. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். **E. Suryanarayana Aiyar** B. A., B. L., *Editor*

1669

புத்தகம் 1. | ரௌத்திரிஸு ஆடிமீ உஎஉ புதன்கிழமை **11th August 1920.** தஞ்சாவூர். | பிரதி 9.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை. புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனதுடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:-

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ 5—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 3—0—0
பினங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 4—0—0

விளம்பர விகிதம்:-

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ 20—0—0
4 insertions per month per column	Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :- செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

நாணயமும் நயமுமான

இடம்

ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

ஓரியண்டல் வேர்ஹவுஸ் தஞ்சாவூர்

பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, முந்தாணை குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனாகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சரஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், டீக்கலர், காங்கு கலர்களில் ஓம்ரூல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜமக்காளங்கள்.

சர்கூட் ஜமக்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவறக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத தினுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு தினுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில் பார்த்து வாங்க வில்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாய நுட்பம், விநோதக்குறிப்பு, அன்னிய வர்த்தமானம், பொது வர்த்தமானம், இராஜாங்க சமாச்சாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0. (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees four per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager,
Young India.
Ahmedabad.

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மாஜெனர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

கோரனஸ்ட்வ் நெ. 5. ரூ **14-0-0.**

ஸன் கம்பெனி,
தஞ்சாவூர்.

தஞ்சை ஜில்லா போர்டு நிர்வாக ரிபோர்ட்.

போர்டாரால் அங்கீகரிக்கப் பட்டது.

1919-20 வருஷத்திய தஞ்சாவூர் ஜில்லா போர்டின் நிர்வாக ரிபோர்ட், இம்மாதம் 5ந்தேதி மாலைமணிக்குக்கலெக்டர்ஆபிஸில் கூடியஜில்லா போர்டு கூட்டத்தில் படிக்கப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. அதிலுள்ள சில முக்கிய குறிப்புகளை மாத்திரம்வெளியிட்டிருக்கிறோம். நேயர்கள்கவனிப்பார்களாக:—

பிரஸ்தாப வருஷத்தின் கடைசி தினத்தில் ஜில்லா போர்டு மெம்பர்களாக விருந்தவர்களின் மொத்தத் தொகை 41. இதில் 7 பேர் எக்ஸ அபிஷியோ மெம்பர்கள். ஆறு பேர் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப் பட்டவர். 28 பேர் தாலுக்கா போர்டுகளால் தெரிந்தெடுக்கப் பட்டவர். கவர்ன்மெண்டாரால் நியமனம் செய்யப்பட்டவர் களில் ஒருவர் உத்தியோகஸ்தர்;ஐந்து பேர்கள் உத்தியோகஸ்தரல்லாதவர்கள். சென்ற வருஷத்தில் 12 ஜில்லா போர்டு மீட்டிங்குகள் நடந்தன. அக்காலங்களில் ஆஜராயிருந்தவர்களின் சராசரித்தொகை 22 முதல் 23 க்குள்ளாக விருந்தது. 1919-20 ம் வருஷத்தில் மிஸடர் ஜே. ஆர். ஹக்கின்ஸ் பிரசிடெண்டாகவும், மிஸ்டர் எ. ஜி. லிங் வைஸ் பிரசிடெண்டாகவும் இருந்தார்கள்.

2. தாலுக்கா போர்டுகள்:— இந்த ஜில்லாவின் ஆறு தாலுக்கா போர்டுகளிலும் மொத்தம் 105 மெம்பர்களிருக்க வேண்டுமென்று சட்டமிருக்கிறது. ஆனல்1920ளுமார்ச்சுகடைசி காலத்தில் 91 மெம்பர்களே யிருந்தார்கள். இவர்களில் 11 பேர் உத்தியோகஸ்தர்கள். 30 பேர் தெரிந்தெடுக்கப் பட்டவர்கள். மொத்தம் 82 மீட்டிங்குகள் நடந்திருக்கின்றன. ஆனல் சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷம் 88 கூட்டங்கள் கூட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தாலுக்கா போர்டும் 12 முதல் 16 மீட்டிங்குகள் வரையில் கூட்டியிருக்கிறது. ஐந்து தாலுக்காபோர்டுகளுக்கு உத்தியோகஸ்தரல்லாத பிரஸிடெண்டுகளிருந்தார்கள். இவர்களில் இருவர் தெரிந்தெடுக்கப் பட்டும் மற்ற மூவர் நியமனம் செய்யப்பட்டு மிருந்தார்கள். தஞ்சை தாலுக்கா போர்டுக்கு 1919 ம் வருஷம் ஜூலை 27 ந் தேதி வரையில் மிஸ்டர் ஜே. ஜி. மனோன்மணி அவர்கள் பிரஸிடென்டாக விருந்தார். பிறகு மிஸ்டர் உமா மகேசுவரம் பிள்ளை 1919 ம் ஞுஅக்டோபர் மாதம் 27ந்தேதியிலிருந்து பிரிஸிடெண்டாக விருந்து வருகிறார். இவ்விரு தேதிகளுக்கும் மத்தியில் டிவிஷனல் ஆபீஸர் வேலை பார்த்து வந்தார். 1919 ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26 ந் தேதி கும்பகோணம் தாலுக்கா போர்டுக்குப்பிரஸிடென்ட் அவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டது.

கவர்ன்மெண்டாரால் நியமனம் செய்யப்பட்டு 1919ம் ஞுஏப்ரல் 25 ந் தேதி வரையில் மிஸ்டர் லட்சுமி வராக ஐயங்கார் தாலுக்கா போர்டு பிரஸிடென்ட் ஸ்தானத்தை வகித்து வந்தார். பிறகு அப்பதவிக்கு 1919ம்ஞு ஜூலை மாதம் 15 ந் தேதி முதல் மிஸ்டர் எஸ். நடேச ஐயர் தெரிந்தெடுக்கப்பட்டார். மாயவரம் போர்டு பிரஸிடெண்டாக 1920 ம்ஞுஜனவரி மாதம் 30 ந் தேதி வரை மிஸ்டர் எஸ். ரத்தினம்பிள்ளை வேலை பார்த்தார். பிறகு மிஸ்டர் என். டேவிட் நாடார் 1920 ம்ஞு ஏப்ரல் முதல் தேதியினின்று வேலை பார்த்து வருகிறார். கனம் அகமத் தம்பி மரைக்காயர் நாகப்பட்டினம் தாலுக்கா போர்டு பிரஸிடெண்டாக நியமிக்கப்பட்டு மே மீ 15 ந் தேதி முதல் வேலை பார்த்து வருகிறார். மன்னார்குடி தாலுக்கா பிரஸிடென்டாக ராவ் பகதூர் ஜி. ஸ்ரீநிவாச முதலியார் சென்ற வருஷமுதல் வேலை பார்த்து வருகிறார்

சென்ற வருஷம் மன்னார்குடி தாலுக்கா போர்டு பிரஸிடெண்ட் மிஸ்டர் கே. ஜி. ஸ்ரீநிவாச முதலியார். 93 நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்து தமது போர்டிலுள்ள முக்கிய விடங்களைப் போய்ப் பார்வை யிட்டார். இவ்வாறே கும்பகோணம் மாயவரம் தாலுக்கா போர்டு பிரஸிடெண்டுகள் 71 நாளும் 56 நாளும் முறையே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். ஆனல் மாயவரம் பிரஸிடெண்டு 1920 ம் வருஷம் ஜனவரி 30 ந் தேதி தமது பதவியினின்றும் விலகி விட்டபடியால் தாம் குறைந்த பட்சம் சுற்றுப் பிரயாணம் செய்ய வேண்டிய நாட்கள் பிரயாணம் செய்து முக்கிய விடங்களைப் பார்க்க வில்லை.

தஞ்சாவூர் தாலுக்கா போர்டு பிரசிடெண்டுகள் (மிஸ்டர் மனோன்மணியும் மிஸ்டர் உமாமகேசுவரம் பிள்ளை சேர்ந்துவக்கீல் உத்தியோகத் தொந்தரவினாலும் மழையினாலும் தாம் அதிக நாள் போர்டுஸ்தலங்களைச் சுற்றிப் பார்க்க முடிய வில்லையென்று காரணம் சொல்லுகிறார். ஆனல் அவர் சொல்லும் மழை காரணம் வேம்பர் டிசம்பர் மாதங்களுக்குப் பொருத்த மாயிருக்கும். எல்லாப் பிரசிடெண்டுகளுக்கும் குறைவாக நாகப்பட்டணம் தாலுக்கா போர்டு பிரஸிடெண்டு தாலுக்கா போர்டுஸ்தலங்களை 13 நாள்தான் சுற்றிப் பார்த்தார். அவர் எட்டு விடங்களைப் போய்ப் பார்த்திருக்கிறார். ஐந்து விடங்கள் ரெயில்வே லயனை யொட்டியிருக்கிற விடங்கள். இரண்டு விடங்கள் நாகப்பட்டினத்தைச் சுற்றியுள்ள விடங்கள்.

4. பண நிலை:— கடன் வரவு செலவு தவிர வருஷ ஆரம்பத்தில் லோகல் போர்டுகளிடத்திலும் யூனியன் பஞ்சாயத்து களிடத்திலுமாக மொத்தம் கையிருப்பு 51,43,434 ரூபாயாகும். பிரஸ்தாப வருஷத்திற்கு முந்திய வருஷத்திய கையிருப்பு 45,35,800 ரூபாவாகும். என்டோமென்ட் பணமும், ரெயில்வே காரண்டி நிதிப்பணமும்தவிரகையிருப்பிலிருந்த தொகை 6,43,707 ரூபாவாகும். வருஷத்தின் மொத்த வருவாய் 20,11,952 ரூபா. மொத்த செலவு 15,23,326 ரூபாவாகும். 1918-19 ம் வருஷத்திலோ வென்றால் மொத்த வருவாய் 20,58,104 ரூபா மொத்தச் செலவு 14,50,470 ரூபாயாகும்.

வருமானங்கள்.

5. ஜில்லாவில் பயிர் செய்யப்பட்ட நிலங்களின் மொத்தவருஷ மதிப்பில் ரூபாய்க்கு ஓர் அணு வீதம் லேண்ட்ஸெஸ் வசூலிக்கப்படுகிறது. பிரஸ்தாப வருஷத்தில் மொத்தம் வசூலான தொகை 4,58,778 ரூபா. 1918-19 ம் வருஷத்தில் 4,38,719 ரூபா வசூலாக்கப்பட்டது.

6. சத்திரங்கள் சாவடிகள் வருமானம்:— இவைகளின் மூலமாய்க் கிடைத்த மொத்த தொகை 28,50,54 ரூபாய், இந்தப் பணத்தில் 2,47,613 ரூபாய் தர்மங்களுக்காக எழுதி வைத்த சொத்துக்களிலிருந்து வசூலானது. சத்திரங்களை யொட்டியுள்ள மார்க்கட்டுகள் மூலமாகக் கிடைத்த ரூபாய் 6,209. வசூலிக்கப்படாத வாடகைக்கு வட்டி 4,584. சத்திரங்களில் குடியிருப்போர்களிடமிருந்து கோர்ட் மூலமாகக் கொடுபடாத தொகைகளை வசூலித்தது ரூ 25,312

7. மார்க்கட்டுகள்:— பிரஸ்தாப வருஷத்தில் லோகல் போர்டுகளால் 14 மார்க்கெட்டுகள் நிர்வகிக்கப் பட்டு வந்தன. இவைகளினின்று 9,370 ரூ வசூலிக்கப்பட்டது. சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷத்தில் 10,003 ரூபாய் வசூலிக்கப் பட்டது.

8. பட்டு அல்லது பரிசல் வருவாய்:— பிரஸ்தாப வருஷத்தில் இந்தத் தலைப்பின் கீழ் 14,834 ரூ வசூலிக்கப்பட்டது. 1918-19 ம் வருஷத்தில் வசூலான தொகை 15,292 ரூபாவாகும்.

9. டோல் கேட்டுகள் வருமானம்:— இந்தத் தலைப்பின் கீழ் வசூலான மொத்தத் தொகை 57,795. பிரஸ்தாப வருஷத்தில் குறைவாகவசூலானதற்குக் காரணம் டோல்கேட் கண்டிராக்டர்களுக்குள் போட்டியில்லாததாகுமென்று சொல்லப்படுகிறது. முனிஸிபல் எல்லையிலிருக்கும் டோல் கேட்டுகளின் மூலமாக வருவாயும் சேர்த்து மொத்தம் வருவாய் 13,4,524

10. ரோடு மரங்கள்:— பிரஸ்தாப வருஷத்தில் 2037 மைல்கள் ரஸ்தா போடப்பட்டது. 1434 மைல்களுக்கு ரோடுகளில் மரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினின்று செலவு போக 22,584 ரூபாய் வரவு. இந்தத் தலைப்பின் கீழ் வருமானத்தை அதிகரிக்க முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

11. இந்த வருமானங்களோடு ரெயில்வேக்கள் மூலமாக மொத்த வருவாய் 42,31,77 ரூபாய். கடனாக கொடுத்திருக்கிற பணத்திற்கு வட்டி மூலமாக வருவாய் 1,72,082 ரூபா. கவர்ன்மெண்டார் கல்வி யபிவிருத்திக்காக 154,658 ரூபாயும், ஆஸ்பத்திரிகளின் கட்டிடங்களுக்காக 3950 ரூபாயும், ரோடுகள் பாலங்கள் முதலியவைகள் கட்டுவதற்கு 15,000 ரூபாயும் இன்னும் செலவுகளுக்கு 121437 ரூபாயும் மொத்தம் சேர்ந்து 295045 ரூபாய் கொடுத்திருக்கின்றனர்.

செலவு.

12. திருநெல்வேலி ஜில்லா போர்டுக்கு மதராஸ் பாங்கியிலிருந்து கடனாக வாங்கிக் கொடுத்த 20.45 லட்ச ரூபாய்க்கு வட்டி கொடுத்தது 11524 ரூபாய். திருநெல்வேலி போர்டிற்குக் கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்திற்கு வட்டி நூற்றுக்கு $4\frac{1}{2}$ வீத மிருந்தது. $5\frac{1}{2}$ வட்டியாக உயர்த்தப் பட்டது. ஆனல், திருநெல்வேலி போர்டார் நூற்றுக்கு $4\frac{1}{2}$ வீதம்தான் கொடுத்து வருகின்றனர். வருஷக் கடைசியில் நிலுவையிலிருந்த கடன் 1,58,980 ரூபா.

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத்தொகைகளைக்காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்திரி ௵ ஆடி ௴ ௨௭ புதன்கிழமை.

11th AUGUST 1920.

தஞ்சை ஜில்லா மகாநாடு.

தஞ்சை ஜில்லா 14-வது மகா நாடு தஞ்சை ஜில்லா பாபநாசம் தாலூக்கா பாபநாசத்தில் நாளது மாதம் 7. 8 தேதிகளில் வெகு அழகாய் அமைக்கப்பட்டக் கொட்டகையில் கூடியது. பிரதிநிதிகளுக்கு மிகவும் சௌகரியமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாச ஐயங்காரவர்கள் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் தேச பக்தியிலும் கல்வியிலும் செல்வத்திலும் சிறந்தவர்; செல்வாக்கு அதிகமுடையவர்; இளம்பிராயத்திலேயே வெகு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தை வகித்தவர்; தம் மனச் சாட்சிக்கும் நியாயத்திற்கும் விரோதமின்றி நடப்பவர்; தேசத்தின் நெருக்கடியான நிலைமையை நன்கு அறிந்தும் தேசத்திற்கு ஊழியம் செய்வதைக்காட்டிலும் மேன்மையான தர்மம் வேறொன்றுமில்லை யென்பதை உணர்ந்தும் இவர் தம் பதவியினின்றும் விலகிக் கொண்டார் என்பதை நம்மவர்கள் அறிவார்கள். இவர் உத்தியோகத்தினின்று விலகிக் கொண்டது நமது பாக்கியமென்றே கருத வேண்டும். அக்கிராசனர் ஸ்ரீமான் ஐயங்கார் அவர்கள் மகா நாட்டின் நடவடிக்கைகளைத் திறமையுடனும், பொறுமையுடனும் தைரியத்துடனும், தீர்க்க திருஷ்டியுடனும் நடத்திக்காட்டினார் என்றே நாம் சொல்லவேண்டும்.

மகாசபைக்கு ஜில்லாவின் பலபாகங்களிலிருந்து ஆயிரக் கணக்கான பேர்கள் விஜயமாயிருந்தார்கள். சுமார் 1607 பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். பிராமணர்களென்ன, பிராமண ரல்லாதார்களென்ன, முஸ்லீம் சகோதரர்களென்ன. பிரபல மிராசுதார்களென்ன, வக்கீல்களென்ன, வியாபாரிகளென்ன, உபாத்தியாயர்களென்ன, இவர்களும் மற்றும் பல தேசாபிமானிகளும் பந்தலில் வந்து நிறைந்திருந்தார்கள். பிரதிநிதிகளின் சௌக்கியங்களை வெகு உத்ஸாகத்துடன் கவனித்த வாலண்டியர்களின் திறமையைப் பற்றியும் அவர்களின் தலைவர் காப்டனின் பொறுமையைப்பற்றியும் நாம் சிலாகிக்காமலிருக்க முடியவில்லை.

அக்கிராசனரின் பிரசங்கம் அர்த்த புஷ்டியாயிருப்பதோடு அது ஆழ்ந்த கருத்துக்களைக்கொண்டதாயுமிருக்கிறது. அதிலுள்ள அரிய மொழிகளைக் கவனிக்குங்கால் இவர் ஜன நாயகக் கொள்கையுடையவரென்றே நாம் சொல்லுவோம். கவர்ன்மெண்டாருக்கு எந்தெந்த விஷயத்தில் எச்சரிக்கை செய்யவேண்டுமோ அந்தந்த விஷயத்தில் எச்சரிக்கை செய்ததோடு நில்லாமல் அவருக்குச் சில புத்திமதிகளையும் கூறியிருக்கிறார். இந்தியாவிற்கு இனி கவர்னர்களாகவும் கவர்னர் ஜெனரலாகவும் வருவோர்கள் இன்ன வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் பொருக்கி அனுப்பப்படவேண்டுமென்று காரணங்கள் கூறியிருக்கிறார். இந்தியர்களின் கஷ்டங்களைப் பிரிட்டிஷ் மகா ஜனங்களுக்கு வற்புறுத்திக் காட்டியிருப்பதோடு இந்தியர்கள் தங்கள் கஷ்டங்கள் விஷயமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டிய வழிகளையும் கூறியிருக்கிறார். சமீபத்தில் தேச மகாஜனங்களுக்கு மனக்கொதிப்பை உண்டுபண்ணியிருக்கும் டயரின் கொடுஞ்செயல்களைப்பற்றி லார்டு சபையில் விவாதம் நடந்த பொழுது அவ்வகுப்பினரின் மனோபாவமின்னதென்பதை உலகம் அறிந்துக்கொண்டுவிட்டது இப்பிரபுக்களில் சிலர் பிரிவி கவுன்சிலின் மெம்பர்களாக நியமிக்கப்படுகிறார்களென்பதை நேயர்கள் அறிய வேண்டும். அவர்களில் சிலரடங்கிய ஒரு கமிட்டிக்கு ஜூடிஷியல் கமிட்டியென்று பெயர். அந்தக் கமிட்டி தான் இந்திய ஹைக்கோர்ட்டுகளின் தீர்ப்புகளின் மேல் செய்யப்படும் அப்பீல்களைப்பைசல்செய்கின்றது. நியாயத்தை எவ்விதம் லார்டு சபையினர்கள் கண்டுபிடிக்கிறார்கள் என்பதை டயர் விவாதத்தினால் இந்தியர்கள் நன்கு அறிந்து கொண்டார்கள். பிரிட்டிஷ் நியாய பரிபாலனத்தில் இந்தியர்களுக்கிருந்த நம்பிக்கை குறைந்துபோய் விட்டதென்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் அப்பீல்களைப் பைசல் செய்ய இந்தியாவிலேயே விசேஷமாக இந்தியர்களடங்கிய ஒரு சபையை ஏற்படுத்த வேண்டியது அவசியமென்றும் அதற்காகக் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் ஸ்ரீமான் ஐயங்கார் கூறியுள்ள யோசனையை நம் தலைவர்கள் கவனிக்க வேண்டும்.

அக்கிராசனர் தமது பிரசங்கத்தில் ஜில்லாவைச்சேர்ந்த பல விஷயங்களைப்பற்றி விரிவாய் எடுத்துரைத்திருப்பதை நேயர்கள் கவனிக்கவேண்டும். மறு செட்டில்மெண்டு விஷயமாகச் சபையோர் செய்திருக்கும் தீர்மானத்தை மனதில் வாங்கிக்கொண்டு பெரிய மிராசுதார்கள் நமது நண்பர் ஸ்ரீமான் ராமபத்திர உடையாரைப்போல் தைரியமாக முன் வந்து ஏழைகளாகிய சிறு மிராசுதார்களைக் காப்பாற்றுவதோடு, கண்ணம்பாடி அணைக்கட்டு விஷயமாகச்செய்யவேண்டியகாரியங்களையும் சுறுசுறுப்புடனும்விடா முயற்சியுடனும் செய்வார்களென்று நம்புகிறோம். நமது ஜில்லா சம்பந்தமான பல விஷயங்களைப்பற்றிப் பிரதிநிதிகள் மகாநாட்டில் தமது தாய் பாஷையில் சவிஸ்தாரமாக எடுத்துரைத்தார்கள். குறைகளை கண்டித்துப் பேசியதுடன் அவைகள் நீங்குவதற்குச் சரியான பரிகாரங்களையும் எடுத்துச் சொன்னார்கள். ஜில்லா போர்டு ரெயில்வே விஷயம் சத்திரம் இலாகாவைப்பற்றியுள்ள விஷயம் இவை போன்ற பற்பல விஷயங்களைப்பற்றி கூறியுள்ள குறைகளை அவ்வந்த டிபார்ட்டுமெண்டார்கள் கவனித்துச் சீர்திருத்தம் செய்வார்களென்று எதிர் பார்க்கிறோம்.

நமது ஜில்லாவின் குறைகளெல்லாம் நீங்கவேண்டுமானால், ஜில்லா மகா நாட்டை வருடம் ஒரு முறை கூட்டி "நான் மேடையின் மீது ஏறிப் பேசினேன்; தீர்மானங்களை ஆதரித்தேன். அவர் அப்படிப் பேசினார். இவர் இப்படிப் பேசினார்" என்று சொல்லிக்கொண்டு காலத்தைக் கழிப்பது வீணாகும். உண்மையில் நாம் நமது தாய் நாட்டிற்கு ஊழியம் செய்வதாயிருந்தால், சில விஷயங்களை ஆலோசிக்க வேண்டும். அதாவது எந்தெந்த கிராமங்களில் என்னென்ன குறைகளிருக்கின்றன வென்றும், அக்குறைகளை எவ்விதமாக நீக்கலாமென்றும், அவைகள் எவருடைய குற்றங்களினால் ஏற்பட்டவை என்றும் தெரிந்துகொள்ளவேண்டும். காங்கரஸ் மகா சபையின் நோக்கங்களைச் சரிவர பொது ஜனங்கள் அறிந்துகொள்ள வேண்டியும், காங்கரஸ் கொள்கைகளையே ஆதரிக்கும் அபேட்சகர்களைச் சட்ட சபைகளுக்குத் தெரிந்தெடுக்க வேண்டியும் இவை போன்ற பொதுக் காரியங்களைச்செய்வதற்காகத் தேசாபிமானமும் உத்ஸாகமும் உள்ள பல ஊழியர்கள் இந்நாளில் மிகவும் வேண்டப்படுகிறார்கள் என்பதில் ஐயமில்லை. ஆகையால் நமது ஜில்லாவிலிருக்கும் சுமார் 2,500 கிராமங்களுக்கு அநேகர் அடிக்கடி சென்று அவற்றின் குறைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது நம் ஜில்லாத் தலைவர்களின் கடமையாகும்.

நமது ஜில்லாவின் கிராமக்குறைகளைக் கவனிப்பதற்காகச் சுமார் 100 ஊழியர்கள் வேண்டும். ஒவ்வோர் ஊழியக்காரரும் 25 கிராமங்களின் க்ஷேம லாபங்களை கவனிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு மாதத்திற்குள் அவர் தம் மேர்பார்வையிலிருக்கப்பட்ட கிராமங்களைச் (25 கிராமங்கள்) சுற்றிப்பார்த்து கிராம வாசிகளோடு கலந்து பேசி, அவர்களின் குறைகளைத் தெரிந்து கொண்டு, கிராமங்களின் நிலைமையை ஆராய்ச்சி செய்து, தாலூக்கா தலைமை ஸ்தானத்தி

லிருக்கும் தாலூகா பிரசார ஆபீஸுக்கு ரிபோர்ட்டு அனுப்பவேண்டும். அங்குள்ள சூபரின்டென்டெண்டு அவர்கள் கிராம ரிபோர்ட்டில் கண்ட குறைகளைப்பற்றி அவை சம்பந்தப்பட்ட டிபார்ட்மெண்டு அதிகாரிகளுக்கு எழுதவேண்டும்; கூடுமானால், அதிகாரிகளுடன் நேரில் கண்டு பேசி சரியான பரிகாரங்களைத் தேடவேண்டும். எனவே, 25 கிராமங்களடங்கிய ஒரு பிருகாவுக்கு ஒரு சூபர்வைசரும் தாலூகா ஒன்றுக்கு ஒரு சூபரின்டெண்டெண்டும், ஜில்லா முழுவதற்கும் ஒரு ஜில்லா சூபரின்டென்டெண்டும் நியமிக்கப்படவேண்டும். சூபர்வைசர்களினால் மாதம் மாதம் அனுப்பப்பட்ட ரிபோர்ட்டுகளைக் கொண்டு தாலூக்காவிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பொதுவான குறைகளைக் குறித்துக்கொண்டு வருஷக் கடைசியில் ஒரு தாலூகா மகா நாடு கூட்டி ஆங்குஆலோசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவேண்டும். தீர்மானங்களை அந்தந்த டிபார்டுமெண்ட் உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். தெரியப்படுத்தியும் பயன்படாவிட்டால், ஜில்லா மகா நாடு கூடும்பொழுது அதில் உத்தியோகஸ்தர்களின் கவனக் குறைவையும் அவர்களது குறைவினாலுண்டாகும் அக்கிரமங்களையும் பகிரங்கம் செய்து மீண்டும் மனச் சோர்வடையாமல் கிளர்ச்சி செய்து ஜில்லா அதிகாரிகளைக் கண்டு பரிகாரங்கள் தேடவேண்டும். ஜில்லா மகா நாட்டில் செய்த தீர்மானங்களுக்கும் கஷ்டங்களுக்கும் வழி பிறக்காவிடில், வருடம் தோறும் கூடும் மாகாண மகா நாட்டில் அவைகளைக் கொண்டுவந்து பரிகாரம் தேடவேண்டும். இம்மாதிரி செய்யப் பொருள் வேண்டுமென்று பலர் சொல்லுவார்கள்.

இது போன்ற காரியங்களுக்கு வேண்டிய பணம் நமது ஜில்லாவில் இல்லாமற்போகவில்லை. மனமும் முயற்சியும் தான் வேண்டும். பணம் கொடுக்கப் பலபேர்கள் தயாராகவிருக்கின்றார்கள். விஷயத்தை நன்றாகவும் தெளிவாகவும் சொல்லவேண்டியது தான் குறைவு. கேட்டால் இல்லையென்று சொல்லமாட்டார்கள். வேண்டியது கொடுப்பார்கள். ஏன்? பொது விஷயங்களில் பலர் ஊக்கம் கொண்டிருக்கிறார்கள். இதை நாம் பாபநாச மகாநாட்டில் பார்த்து மகிழ்ந்தோம். பிராமணரல்லாதாரின் ஒற்றுமையையும் ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் உற்று நோக்கினால் நாம் வற்புறுத்தியிருக்கும் ஏற்பாடு வீண் போகாதென்பது திண்ணம்.

மகாநாட்டில் நடந்த நடவடிக்கைகளைச் சற்று ஆராய்ந்து பார்க்கும்பொழுது நமக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகின்றது. நமது முஸ்லீம் சகோதரர்களின் உத்ஸாகம் அளவற்றதாயிருந்தது. சிறுவர்களின் தேச பக்திக்கு எல்லையில்லாமலிருந்தது. எல்லோரும் தற்கால நிலைமையின் ரகசியத்தை நன்கு அறிந்தவர்களாகவே காணப்பட்டார்கள். பெரிய சபைகளில் அமைதியோடு விஷயங்களைக் கவனிக்கும்பழக்கம் நன்றாய்ஏற்பட்டுவிட்டதென்றே சொல்லலாம். சகோதரர்களே! ஒன்று மாத்திரம் நாம் கவனிக்க வேண்டும். அதாவது ஸ்ரீமான் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் நமக்குச் சொன்ன புத்திமதியே. பிராமணர் பிராமணரல்லாதாரைத் தூஷித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைபோல் குறுக்கேயிருக்கக்கூடாது. பிராமணரல்லாதார் ஏழைப்பிராமணர்களை அநாவசியமாக நிந்திக்கக்கூடாது. அவர்களின் பேரில் துவேஷம் கொள்ளக்கூடாது. ஹிந்துக்கள் மகமதியர்களோடு சகோதர பாவத்தைப் பரவச் செய்துகொண்டு வரவேண்டும். ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ளக்கூடாது. நாமெல்லோரும் வசிக்கும் தேசம் ஒன்றே; நாம் வாழ்ந்து வரும் ஜில்லாவும் ஒன்றே; நாம் சேர்ந்து அடைய வேண்டிய நன்மைகளும் பாத்தியங்களும் ஒன்றாகவேயிருக்கின்றன. ஆதலால் நண்பர்களே! தேச முன்னேற்றத்திற்குரிய லட்சியமின்னதென்று அறிந்த நீங்கள் அற்ப வித்தியாசங்களையும் வேற்றுமைகளையும் பாராட்டாமல் அந்த லட்சியத்தை அடைய எல்லாநியாயவழிகளிலும் கிளர்ச்சி செய்து தேச சேவை செய்வீர்களாக.

இடை நிலை விளக்கு.

கிராமஉத்தியோகஸ்தர்கள்மகாநாடு.

தஞ்சை ஜில்லா 2-வது கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு இம்மாதம் 8ந்தேதி பாபநாசத்தில் ஸ்ரீமான் எ. ரங்கசாமி ஐயங்கார் அக்கிராசனத்தின் கீழ் வெகுவிமரிசையாய்க்கூடியது. பிரதிநிதிகள் எல்லாத் தாலுக்காக்களிலிருந்தும் ஏராளமாக விஜயம் செய்திருந்தார்கள். இவர்கள் தவிர இம்மகாநாட்டிற்குத் தருமபுரி சேலம் முதலிய விடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் பிரசன்னமாயிருந்தார்கள். மகாநாடு கூட்டப்பட்டு நடந்ததின் வைபவமும், பிரதிநிதிகளின் ஊக்கமும், பெரிய உத்தியோகஸ்தர்கள் காட்டின ஆதரவும் கொண்டாடத்தக்கன. தஞ்சை ஜில்லா கலெக்டர் மிஸ்டர் பி. ஸி. டட் என்பார் இம்மகா நாட்டின் மீது தமக்கு அனுதாபமிருக்கிறதென்பதைக் கடித மூலமாக அறிவித்துத்தாம்மகாநாட்டிற்குவரமுடியாமையை விசனித்துக் குறிப்பிட்டிருந்தார். கும்கோணம் டிவிஷனல் ஆபீஸரும், பாபநாசம் சப் மாஜிஸ்டரேட்டும்மகாநாட்டிற்குவிஜயஞ்செய்து அங்கு நடந்த நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். பெரிய கலெக்டர் அங்குவர முடியாமற்போனாலும், மேற்குறிப்பிட்டஉத்தியோகஸ்தர்கள் கிராம உத்தியோகஸ்தர்களின் உணர்ச்சியையும் கோரிக்கையையும் நன்கறிந்திருப்பார்களென்றே நம்புகிறோம். இவர்கள் தாங்கள் அறிந்துகொண்டதோடு நில்லாமல் கிராம உத்தியோகஸ்தர்களின் உணர்ச்சியைக் கவர்ன்மெண்டாருக்கு உள்ளபடி அறிவிப்பாரென்றே எதிர்பார்க்கிறோம்.

முன்போலில்லை.

காலம் முன்போலில்லையென்பதைக் கவர்ன்மெண்டார் முக்கியமாக அறியவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்கள், இதுகாறும் வாயில்லாப்பூச்சிகள்போல், தங்களுடைய குறைகளையும், கஷ்டங்களையும் வெளியிடாமலிருந்ததுபோல் இனி எக்காலமும் அவ்வாறே இருப்பார்களென்று யாராவது சொன்னால், அவர்கள் பைத்தியக்காரர்களென்று அழைக்கப்படுவார்களென்பது நிச்சயம். கிராம உத்தியோகஸ்தர்கள் தலை நிமிர்ந்து நடக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். அவர்கள் கவர்ன்மெண்டாருக்குத் தாங்கள் செய்யவேண்டிய வேலைகளை உண்மையாகவும் விசுவாஸமாகவும், இதுவரையில் பரம்பரையாகச் செய்யப்பட்டு வந்ததுபோல், செய்துவர வேண்டுமென்றும் வேலைகளுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்படவேண்டுமென்றும் உணர்ந்துவிட்டார்கள். தங்களுடைய பிறப்புரிமைகள் பொன்னேபோல் போற்றப்படவேண்டுமென்று பகிரங்கம்செய்து அவைகளைஎங்கும்வற்புறுத்துகிறார்கள். இந்நிலையில், கவர்ன்மெண்டார் அநாவசியமாகக் காலம் கடத்தாமல், கிராம உத்தியோகஸ்தர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவது அவசியமென்பதை நாம் மிகுந்த வணக்கத்துடன் எடுத்துச்சொல்லுகிறோம். "கண்மூடித்தனமாக நடக்கிறது நடக்கட்டும்" என்று அதிகாரிகள் கவர்ன்மெண்டாருக்கு கிராம உத்தியோகஸ்தர்களின் கஷ்டங்களை உள்ளபடி அறிவியாமலிருந்தால், அவர்கள் கடைசியில் ஜனங்களால் குறைகூறப்படுவார்களென்று அஞ்சுகிறோம்.

ஒரு வேண்டுகோள்.

கிராம உத்தியோகஸ்தர்களின் இயக்கம் ஏற்பட்டுச் சொற்ப காலமேயானாலும், அதற்குள் அது வலுத்தோங்கி வளர்ந்து கவர்ன்மெண்டாரின்கவனத்தையும், பொது ஜனங்களின் ஆதரவையும் பெற்றதானது பாராட்டத்தக்கதென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். தங்கள் இயக்கத்தின் வளர்ச்சியைப்பற்றிக் கிராம உத்தியோகஸ்தர்கள் அகமகிழ்ந்திருத்தல்கூடாது. அவர்கள் தங்கள் நிலைமை முழுமையும் சீர்படுத்திக்கொள்ளவில்லையென்பதை உணரவேண்டும். அவர்கள் தங்கள் நிலையை உயர்த்திக்கொள்வதற்குச் செய்யவேண்டிய காரியங்கள் பலவிருக்கின்றனவென்பதை உணர்ந்து அக்காரியங்கள்என்னென்னவென்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். அவ்வப்போது கிராம உத்தியோகஸ்தர்களுடைய முன்னேற்றத்திற்குரிய வழிகள் இன்னின்னவையென்பதும் அவர்களுடைய கஷ்டங்கள் இன்னின்னவழிகள் மூலமாக நிவிருத்திக்கப்படவேண்டுமென்பதும் இப்பத்திரிகையில் விவரிக்கப்படுமென்பதைக்கேட்டுக் கிராம உத்தியோகஸ்தர்கள் சந்தோஷப்படுவார்களென்று நம்புகிறோம். பாபநாசத்தில் நடந்தேறிய மகாநாட்டின் நடவடிக்கைகளும் தீர்மானங்களும், இவ்வாரப் பத்திரிகையில்

இடமில்லையாகையால் அடுத்த வாரப்பத்திரிகையில் வெளியிட நேரிட்டிருப்பதற்கு நேயர்கள் மன்னிப்பார்களாக.

அனுதாபக் கடிதங்கள்.

பாபநாச மகாநாடு நன்குநடைபெறுவதற்குப் பலவிடங்களிலிருந்து வரப்பெற்ற பல அனுதாபக்கடிதங்களில் தருமபுரிகிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் பிரிஸிடெண்டினிடமிருந்தும், ஊத்தங்கரைத் தாலுக்காக் கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கக்காரியதரிசியினிடமிருந்தும், திருவாலங்காடுவட்டம் கர்ணம் ஸ்ரீமான் கலியாணமய்யரிடமிருந்தும் பவானி தாலுக்கா காவிரிபுரம் கிராம முனிசீப் அவர்களிடமிருந்தும், ஹரித்துவாரமங்கலம் கிராமமுனிசீப் அவர்களிடமிருந்தும், கிராமமுனிசீப் ஸ்ரீமான் வி. மாரியப்ப நாயுடு அவர்களிடமிருந்தும்வந்த கடிதங்கள் மகாநாட்டில் படிக்கப்பட்டன. மகாநாடு, பெரியோர்களின் ஆசீர்வாதத்தாலும், மகாநாட்டுக் காரியதரிசி ஸ்ரீமான் பி. இராமச்சந்திர ஐயருடைய முயற்சியாலும், ஜில்லா சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் சுப்பையாருடைய ஊக்கத்தினாலும் நன்றாக நடைபெற்றதைக் குறித்து நாம் சந்தோஷப்படுகிறோம். மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் ஐயங்காரின் அக்கிராசனப் பிரசங்கம் நல்ல கருத்துக்கள் கொண்டதாதலால் நேயர்கள், அப்பிரசங்கத்தை ஒரு முறைக்கு இருமுறையாகப் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

வீணாகாது.

இம்மாதம் 7ந்தேதி பாபநாசத்தில் விக்டோரியா ஹைஸ்கூல் மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் பிரசங்கம் செய்ப நேர்ந்தபோது, ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் தேசத்தின் கல்விமுறையைப்பற்றிச் சில முக்கிய உண்மைகளை வெளியிட்டார். இவ்வுண்மைகளை நம்மவர்கள் அறியவேண்டும். தற்காலம் வழங்கப்பட்டுவரும் கல்வி முறையில் உண்டாகும் கெடுதிகள் அதிகமென்றும், அது தற்காலத்திற்கொவ்வாததென்றும், அதைத் திருத்திச் சீர்படுத்த கல்வியாளர்கள் முன்வரவேண்டுமென்றும் இப்பொழுது கொடுக்கப்பட்டுவரும் கல்வியில் தேகப்பயிற்சி போதனைக்கு அதிக கவனம் செலுத்தப்படவில்லையென்றும் கூறினார். தற்காலம் அனுஷ்டானத்திலிருக்கும் பரீட்சை முறையைப் பலமாகக் கண்டித்து, அதனால் மாணவர்கள்படும் துயரங்களை வந்திருந்தோர்கள் மனதுருக மொழிந்தார். இந்திய வாலிபச் சாரணர்கள் இயக்கத்தின் அவசியத்தையும் அதனால் மாணவர்கள் அடையும் பயனையும் வற்புறுத்திப் பேசிவிட்டு தற்காலமுள்ள கல்வி முறை சீர்பட்டாலன்றித் தேசம் முன்னடையாதென்றும் கல்வியாளர்கள் இதைக்கவனிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். இவருடைய வேண்டுகோள் வீணாகாதென்று நம்புகிறோம்.

பிளவுபடுத்த யோசனை.

சென்ற வாரம் பாபநாசத்தில் கூடிய 14-வது தஞ்சை ஜில்லா மகாநாட்டின் வரவேற்புக்கூட்டத் தலைவர் ஸ்ரீயான் ஐனா. இராஜகோபால செட்டியார் தமது வரவேற்புப்பிரசங்கத்தில் ஜில்லா சம்பந்தமான முக்கிய விஷயங்களைப்பற்றி விவகரித்தது நன்றேயாகும். அதில் தஞ்சை ஜில்லாவை அதிகாரிகள், வங்காளத்தைப்பிரிவினைசெய்ததுபோல் இரண்டாகப் பிளவுபடுத்த யோசனைசெய்துவருவதாகக் குறிப்பிட்டிருந்தார். பெரியவிடங்களிலும் இவ்வாறு பேசப்பட்டு வருவதை நாம் அறிவோம். ஜனங்கள் இந்தவதந்தியைக்கேள்வியுற்றுஎன்னென்னவோ ஊகிக்கிறார்கள். ஒருகால் இந்த வதந்தி உண்மையானால், கவர்ன்மெண்டார் தாங்கள் செய்ய விருக்கும் காரியத்திற்குரிய காரணங்களையும், யோசனைகளையும் சீக்கிரம் பகிரங்கம் செய்வது அவசியமாகும். இதுபோன்ற விஷயத்தில் கவர்ன்மெண்டார் மூடுமந்திரம் செய்யலாகாது.

தஞ்சையில் திலகர் மண்டபம்.

தலைவர் சிரேஷ்டரான லோகமான்ய பாலகங்காதர திலகரின் ஞாபகார்த்தத்தை என்றும் நிலைநிறுத்தும்பொருட்டு இந்தியாவில் ஆங்காங்குக்கூட்டங்கள் கூட்டப்பட்டுப் பணம் வசூலிக்கப்பட்டுவருகிறது. சிலவிடங்களில் ஜனங்கள் திலகரின் உருவச்சிலைகள் நாட்டப்படவேண்டுமென்று முயற்சிகள்செய்கிறார்கள். இன்னும் சிலவிடங்களில் வேறு சிலர் திலகர்பெயரால்பாடசாலைகளும் புஸ்தகசாலைகளும்முதலிய பலபொதுஸ்தாபனங்கள் ஏற்படுத்தி நடத்தப்படவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். வேறு சிலவிடங்களில் மற்றும் சிலர் திலகர் மண்டபம் ஒன்று கட்டப்படவேண்டுமென்று வெகு பிரயாசைப்படுகிறார்கள். நம் ஜில்லாவின் தலை நகரமாகிய தஞ்சைமாநகரில், மகாராஷ்டிரர்கள் சிறப்பாக அரசாட்சிசெய்த இப்பட்டணத்தில், தேசபக்தி சிறந்துவிளங்கும் இந்நகரில் திலகரின் பெயரால் ஒரு பிரசங்க மண்டபம் கட்டிமுடிக்கவேண்டுமென்று மகாஜனங்களெல்லோரும் ஒரே மனதாய் முடிவுசெய்திருக்கிறார்கள். இந்தக் கைங்கரியத்திற்கு ஸ்ரீமான் கிருஷ்ணசாமி நாயக் அவர்கள் ஆயிரம் ரூபாயும், ஸ்ரீமான் சுந்தரசுவாமிகள் ஆயிரம் ரூபாயும், ஸ்ரீமான் கே. நடராஜன் இருநூறும், ஸ்ரீமான்கள், கோதண்டராமய்யங்கார், இ. சூரியநாராயண ஐயர், டி. இராமச்சந்திர செட்டியார், காசிராம்பண்டியா தலாநூறு ரூபாயும் கையொப்பம் செய்திருக்கிறார்கள். இன்னும் பலர் உதவி செய்யக்காத்திருக்கிறார்கள். காரியதரிசிகள் காலம் தாழ்த்தாது பணம் வசூல்செய்ய முற்பட்டால் தஞ்சை நகரில் மாத்திரம் வேண்டிய பணம் குவிந்துவிடும். காரியதரிசிகளுக்குச் சிரமமின்றி பொது ஜனங்கள் தாங்களாகவே தங்களாலியன்றளவு இந்நற்காரியத்திற்குப் பண உதவிசெய்வார்களென்று நம்புகிறோம்.

தோட்டிகளின் வேலை நிறுத்தம்.

இன்று காலை இந்நகரிலுள்ள முனிஸிபல் தோட்டிகள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்களென்று அறிகிறோம். இதற்குக் காரணம் இன்னதென்று திட்டமாகத் தெரியவில்லையாயினும், நாம் விசாரித்தவரையில், முனிஸிபல் தோட்டிகளுக்கு இன்று தேதி பதினொன்றாகியும் சம்பளம் கொடுபடாததாகுமென்று சொல்லப்படுகிறது. இக்காரணம் உண்மையாயின் முனிஸிபல் ஆபீஸின் நிர்வாக ஊழல்கள் என்றுதான் சீர்திருத்தம் பெறுமோ? தெரியவில்லை, கஷ்டகாலத்தில், வேலைக்காரர்களுக்குக் குறிப்பிட்ட தேதியில் சம்பளம் பட்டுவடாசெய்தலவசியமென்பதை ஏனோ முனிஸிபல் மேலதிகாரிகள் கவனிக்கவில்லை.?

உலகப்போக்கு.

இந்த வாரப்பத்திரிகையில் தஞ்சை ஜில்லா கான்பரன்ஸ் விஷயங்களும், கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு விஷயங்களும் அதிகமாக வெளியிட நேரிட்டபடியால், பல முக்கிய வியாசங்களும், குறிப்புகளும் அடுத்த வாரப்பத்திரிகையில் வெளியிட நேரிட்டிருப்பது பற்றி நாம் வருந்துகிறோம். நேயர்கள் மன்னிக்க.

* *

லோகமான்ய பாலகங்காதரதிலகர்மரணத்தைக்குறித்து இந்தியாமுழுமையும் குக்கிராமங்களிலும் கூடமகாஜனக்கூட்டம் கூட்டப்பட்டு, அனுதாபத் தீர்மானங்கள் செய்யப்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள ஜனங்களின் சக்திக்கியன்றளவு திலகரின் ஞாபகார்த்த சின்னங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. இவைகளெல்லாவற்றையும் தினசரிப் பத்திரிகைகளில் கூட பிரசுரம் செய்வது ஸாத்யமில்லாமலிருக்கும் பொழுது வாரப்பத்திரிகைளில் அவ்வளவும் வெளியிடுவது சிரமமென்றே நண்பர்கள் அறியவேண்டும்.

* *

இம்மாதம் ஒன்பதாந்தேதி மாலை 6. மணிக்குத் திலகரின் உருவப்படம் ஆனைமுன் செல்ல ஊர்வலமாகக் கொண்டுபோகப் பட்டது இரவு எட்டு மணிக்கு மணிக்கூண்டு மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டு திலகரின் ஞாபகார்த்தமாக ஒரு பிரசங்க மண்டபம் கட்டப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இக்காரியத்தில் முஸ்லீம்களும் இந்துக்களுமாகச் சேர்ந்து காலையில் உருவப்படத்துடன் வடவாற்றுக்குச் சென்று எல்லோரும் ஸ்நானம் செய்து விட்டு வீடுதிரும்பினார்கள்.

* *

தஞ்சை கலியாணம் சுந்தரம் ஹைஸ்கூல் மாணவர்கள் விருப்பத்தின் பேரில் ஸ்கூல் அதிகாரிகள் திலகரின் துக்கதினத்தைக் கொண்டாடும் பொருட்டு இம்மாதம் 9 ந்தேதி பள்ளிக்கூடத்தை மூடிவிட்டார்கள்.

* *

தஞ்சை கலியாணம் சுந்தரம் ஹைஸ்கூல் உபாத்தியாயர்கள் தங்களுக்குச் சம்பள உயர்வு செய்யப்பட வேண்டுமென்று மானேஜருக்கு அறிவித்திருப்பதாகவும், மானேஜர் தக்கது செய்யப்படுமென்று கூறியதாகவும் கேள்விப்படுகிறோம்.

* *

சென்ற வாரம் வெள்ளிக்கிழமை கும்பகோணம் வீரபத்ர சுவாமிகோவிலில் கூட்டங்கூடி ஹெட் கான்ஸ்டேபில் மிஸ்டர் தர்மலிங்க முதலியாரைப்பிரிஸிடெண்டாகவும்மெஸர்ஸ் எஸ். குப்புசாமிபிள்ளையையும் ஆர். முத்தையா பிள்ளையையும் காரியதரிசிகளாகவும், 10 பேர் கொண்ட நிர்வாக கமிட்டியாரையும் தெரிந்தெடுத்து ஒரு போலீஸ் யூனியனை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

*   *

சிதம்பரம் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பி. ஜே. பட்டாபிராம சாஸ்திரி பாபநாசம் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக நியமனம்.

*   *

கும்பகோணம் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் எ. கோவிந்தராஜுலு முதலியார் வேலூர் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக நியமனம்.

*   *

திருவாலூர் ரேஞ்சு ஆக்டிங் சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் டி. எஸ். ரங்காசாரியார் செங்கற்பட்டு ரேஞ்சுக்கு நியமனம்.

*   *

தஞ்சை கவர்மெண்ட் டிரேயினிங் ஸ்கூல் 2-வது அஸிஸ்டெண்ட் மிஸ்டர் பி. ரங்கநாத ஐயர், கும்பகோணம் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டராக நியமனம்.

*   *

இந்த ஜில்லா தலையூர் கிராமத்தில் சென்ற ஒரு கால மாதமாய் வீடுகளும் வைக்கோல்போர்களும் தீக்கிரையாகி வருகின்றன. சென்ற 5, 6 தினங்களுக்கு முன்பு ஒரு துஷ்டன் பெருமாள் கோயிலுக்குள் நுழைந்து சுவாமியை அப்புறப்படுத்தி விட்டானென்று ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

உள்நாடு

முசிரி பக்கத்திலுள்ள காவேரியில் படகு ஒன்று 16 பேர்களுடன் முழுகிப்போய் விட்டதாகவும், அவர்கள் இதுவரையில் காணப்பட வில்லையென்றும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

*   *

காரைக்குடி ஹிந்துமதாபிமான சங்கத்தின் மூன்றாவதாண்டு நிறைவுவிழா நிகழும் ரௌத்ரி ஆவணி மீ ௬ ௭ (21-8-20) (22-8-20) சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் "திரிச்சி டாக்டர் T. S. S. ராஜன்" அவர்கள் தலைமையில் நடைபெறும்.

*   *

அகரமாங்குடி மகாஜனங்களும், மதுரை வக்கீல் குமாஸ்தாக்கள் சங்கத்தாரும், பள்ளத்தூர் ஞானபிவிர்த்தி தர்மசபையாரும்லோகமான்யபால கங்காதர திலகரின் மரணத்தைக்குறித்துக் கூட்டங்கூடி ஓர் அனுதாபத் தீர்மானம் செய்தார்களென்று அவ்வந்தச் சங்க காரியதரிசியார் நமக்கு அறிவிக்கிறார் (முழுவிபரம் வெளியிட முடியாததுபற்றி விசனிக்கின்றோம். ப-ர்)

*   *

[illegible]தீய தொழிலாளரின் க்ஷேமத்தை உத்[illegible]தேசித்து அயல் நாடுகளில் பிரயாணம் செய்த [illegible]டர் பி. பி. வாடியா இம்மாதம் 8 ந்தேதி சென்னை வந்து சேர்ந்தார். அவருக்குச் சென்னைத் தொழிலாளர் சங்கத்தார்கள் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள்.

கிலாபத் கிளர்ச்சி சம்பந்தமாக முன்னர் கராச்சியில் அரெஸ்டு செய்யப்பட்ட ஜனாப்பீர் மாபூப் ஷா சில நாட்களாகச் சிறையில் உண்ணாவிரதம் கொண்டிருக்கிறாரென்று தெரிகிறது.

*   *

லார்ட்ஸின்ஹாபீசார் ஒரிஸா மாகாணத்திற்கு கவர்னராக நியமிக்கப் பட்டிருக்கின்றாரென்று கல்கத்தா இங்கிலீஷ் மான் பத்திரிகை கூறுகிறது.

*   *

சென்னைச் சட்டசபைக கூட்டம் இம்மாதம் 17 ந்தேதி கூடும்.

*   *

அடுத்தமாதம் கல்கத்தாவில் நடக்கப்போகும் விசேஷ காங்கரஸுக்குப் பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் தங்கள் கட்சியைச் சேர்ந்த ஆறு பார்லிமெண்ட் மெம்பர்களை அனுப்பஉத்தேசித்திருப்பதாகத்தெரிகிறது.

*   *

இந்தியாவின் க்ஷேமத்திற்கு, இங்கிலாந்தில் உழைத்துவரும் கர்னல் வெட்ஜ்வுட் என்பவர் தம் மனைவியுடன் இந்தியாவிற்கு, விசேஷகாங்கிரஸ் கூடுவதற்குள்ளேயே வரயோசித்திருக்கின்றனரென்று தெரிகிறது.

*   *

ஹைதராபாத் சமஸ்தானத்தில் பசுக்கொலை செய்யக் கூடாதென்றும், இதற்குப் பதிலாக ஆடுகளைப் பலிகொடுக்கலாமென்றும நிஜாம்அரசர் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

*   *

சேலம் வாசிகளான மெஸர்ஸ் அப்துல் ஹமீத்சாகிப், சையத் அமீர் சாகிப் எஸ். கே. சடகோப முதலியார், காஜி முகம்மதஷாரிப் சாகிப் எம். எஸ். பாபாஜி சாகிப், எ. எஸ். அப்துல் காதர் சாகிப் என். வி. கிருஷ்ணசெட்டியார், தருமபுரிவாசிகளான டி. எம். முகம்மத் கான் சாகிப். பண்டிட் அருணசல ஐயர் முதலிய கனவான்கள் தாங்கள் வகித்த கௌரவமாஜிஸ்டரேட் பதவியை ஒத்துழையாமை இயக்கத்தை முன்னிட்டு ராஜிநாமாசெய்து விட்டார்கள்.

*   *

இம்மாதம் 12 ந்தேதி காலை ஒன்பதரைமணிக்கு மகாத்மா காந்தி மௌலானா சௌக்கத்தலியுடனும, ஜனாப்கிச்சுலுவுடனும் சென்னை வந்துசேர்கிறார். இவர்கள் ஊர்வலமாக அழைத்துக் கொண்டுபோகப்படுவார்கள். சென்னை மாகாணத்தில் இவர்கள் அதிக நாள் தாமதிக்க மாட்டார்களென்றும் வெளிஜில்லாத் தலைவர்கள் இவர்களைப் பேட்டிக்கண்டு பேசவிரும்புவோர் புறப்பட்டு வரலாமென்றும்ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சரியார் அறிவிக்கிறார்.

*   *

சென்ற 29-7-20 மாலை $5\frac{1}{2}$ மணிக்குச் சேலம் முனிசிபல் எலிமெண்டரி உபாத்திமை சங்கக் கூட்டம் பொன்னம்மா பேட்டை பாடசாலையின் தலைமை உபபத்தியாயர் மிஸ்டர் எம். கிருஷ்ணசாமி பிள்ளை அக்கிராசனத்தின் கீழ் கூடியது. சங்க அபிவிருத்தியைக் கருதியும் உபாத்தியாயர்களின் நிலையை உத்தேசித்தும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

*   *

வங்காள கிலாபத் பிரசார கமிட்டியார் பிரசுரித்துள்ள கிலாபத் முன்னணி வேலை நடக்கை முறை அடங்கியுள்ள துண்டுப் பிரசுரங்களை வங்காள கவர்ன்மெண்டார் பறி முதல் செய்து விட்டனர்.

*   *

லட்சுமணபுரியிலிலுள்ள ஜனாப் அப்துல் பாரி என்பவர் ஒத்துழையாமை இயக்கதனைத் தவிர வேறு வழிகளிருக்கின்றனவாவென்று ஒத்துழையாமை இயக்கத்தை ஆட்சேபிக்கிறவர்களைக் கேட்கிறார். அப்படி ஏதேனும் வழிகளிருந்தால், அவைகளை அறிவிக்கும்படியும் கேட்கிறார்.

*   *

மகாத்மாகாந்திதமக்கு முன்னர்வழங்கப்பட்ட கெய்சர் இந்த பதக்கத்தையும், தென்னாப்பிரிக்காவில் பெற்ற இன்னும் சில பதக்கங்களையும் கிலாபத்தினத்தன்று தியாகம் செய்துவிட்டு ஒரு கண்டிப்பான கடிதத்தையும் லார்ட் செம்ஸ்போர்டுக்கு எழுதி யிருக்கிறார்.

(ஒன்பதாம் பக்கம் தொடர்ச்சி.)

திருவாதியில் சுகாதார நிலை:

திருவாதியில் ஆனைக்கால்வியாதி பயங்கரமாகப் பரவிவருவதால், சாக்கடைநீரை வடிகால் மூலமாக எட்டிக்கொண்டுபோய் விடவேண்டுமென்றும் நகரத்தை விசாலப்படுத்தித்தண்ணீர்க்குழாய்களை வைக்கவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டையும் ஜில்லா போர்டாரையும் கேட்டுக் கொள்கிறது.

நூல்நூற்கும் தொழிற்சாலை.

பரீட்சார்த்தமாக தஞ்சையில் நூல் நூற்கும் தொழிற்சாலை யொன்றுகூடிய சீக்கிரத்தில் ஏற்படுத்தவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்கிறது. (இன்னும் வரும்.)

நேர்த்தியான பிரின்டிங்

ஜி. எஸ். மணியா அண்டு கோ., தஞ்சாவூர்.

இவ்வச்சி யந்திரசாலையை மிஸ்டர் கோபாலசாமிஐயரிடமிருந்து வாங்கி இப்போது மிஸ்டர் டி. எஸ். கிருஷ்ணராவ் வெகு நன்றாகவும் திறமையாகவும் நடத்திவருகிறார். இந்த அச்சியந்திரசாலையில் தமிழ் இங்கிலீஷ் புஸ்தகங்கள், நோட்டீசுகள் விஸிடிங்கார்டுகள், கோர்ட் பெடிஷன்கள் மற்ற மனுபாரங்கள் சுத்தமாகவும் நேர்த்தியாவும் அச்சடித்துக் குறைந்தசார்ஜுக்கு வேலை செய்து கொடுக்கப்படும்,முனிஸிபாலிடியார்களும் ஜில்லா போர்டார்களும், இந்த அச்சுக்கூடத்தின் நேர்த்தியான பிரின்டிங்கைக் கவனித்து இதில் அச்சுவேலை கொடுத்து வருகிறார்கள். குறித்த காலத்தில் வேலை செய்து கொடுக்கப்படும்.

T. B. Jayasunker Devey
இயற்றிய
ரத்னப்பிரகாசம்.

நவரத்தினங்களின் குணங்கள், தோஷங்கள், பரீக்ஷை, நல்ல ரத்தினங்களை அணிவதனால் உண்டாகும் நன்மைகள் இவைகளைப்பற்றி கூறும் அபூர்வ நூல்.
விலை அணா 8.

Apply to:—
R. B. தவே அண்டு சன்ஸ்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர் ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் 2-வது மகாநாடு.

கிராம உத்தியோகஸ்தர்களின் வரவேற்புப்பத்திரம்.

இம் மாதம் 8ந் தேதி பாபநாசத்தில் மேற்கண்ட மாகாநாடு கூடியபதும், தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் அக்கிராசனர் மிஸ்டர் எ. ரங்கசாமி ஐயங்காருக்குக்கீழ்க்கண்ட வரவேற்புப் பத்திரத்தை வாசித்து கொடுத்து அவரை வரவேற்றினர்கள். அப்பத்திரமாவது:---

அன்பார்ந்த ஐயா.

தாங்கள் இந்தஜில்லாவின் பலவளம் மிகுந்த நல்நிலமாகிய நன்னிலம் தாலூகாவில் பிறந்து கிராமவாழ்க்கையின் தத்துவங்களை அறிந்தவராதலாலும் உத்தியோகஸ்தர்களின் கஷ்டநஷ்டங்களை அநுபவரூபமாக நன்றாய்த் தெரிந்துள்ளவராதலாலும் தங்கள் வரவை நல்வரவாக ஏற்கக்கடமைபட்டிருக்கிறோம்.

தாங்கள் சட்டப்பரீட்சையில் தேறிய பிறகு தஞ்சையில் வக்கீல் உத்தியோகத்தை அடைந்து, பிறகு உலக நன்மையே தம் நன்மையெனக்கொண்டு அத்தொழிலை விடுத்து உத்தம தேசிய ஆங்கில பத்திரிகையான "ஹிந்து" வின் உதவி ஆசிரியஸ்தானத்தை வகித்துத்தேச ஊழியஞ்செய்து வந்தீர்கள். அதனால் தேசத்திற்கு நன்மையிருந்தபோதிலும் ஆங்கிலப்பத்திரிகையின் அங்கத்தில் ஒருசிறிதும் குறைவில்லாததும் தாய்பாஷையுமாகிய தமிழில் பிரசுரிக்கப்பட்டு வந்துகொண்டிருக்கிறசிறந்ததேசியப்பத்திரிகையான "சுதேசமித்திரன்" ஆசிரியராக இப்போது வகித்து ஷை பத்திரிகை மூலமாய்ப் பலரும்எளிதில் உலகவிஷயமாயும் ஆத்மவிஷயமாயுமுள்ள பலவிஷயங்களைச்செவ்வனே உணருமாறு நம்தாய்நாட்டுத்தமிழ்ப் பத்திரிகாசிரியராக அமர்ந்திருக்கிற முறையாலும் மீண்டும் நல்வரவேற்கக்கடமைப்பட்டிருக்கிறோம்.

தலைவ!

கிராம உத்தியோகஸ்தர்களாகிய நாங்கள் கவர்ன்மெண்ட் நிர்வாகத்திற்கு அடிப்படையாகவும், அதிகப்பொறுப்புள்ளவர்களாகவும் கடின வேலையும் குறைந்த சம்பளமும் பெற்றுக் கஷ்டமனுபவிக்கிறவர்களாகவும் பல துறைகளிலிருந்துவரும் எல்லா உத்தியோகஸ்தர்களையும் நாங்கள் வரவேற்கும் தன்மை வாய்ந்திருப்பவர்களாகவும் இருந்தும் இழிவாகவும் கேவலமாகவும் நடத்தப்பட்டு வருவது காலவசமே.

மகாயுத்தம் தோன்றினதாலும் கிரமப்படி விளைவில்லாததினாலும் அகவிலை மிகவிலையாகி அதிக சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்களே அல்லற்படும்இக்காலத்தில் பழமையாய்ச் சொற்ப சம்பளம் வாங்கிவரும் நாங்கள் பரம்பரையாய் அநுபவித்து வந்த பாதியதையை விட மனமில்லாமல் இராஜவிஸ்வாஸமேலீட்டினால் கடனுக்கு ஆளாகி எவ்விதத்திலும் கஷ்டத்தையே யடைந்து வருகின்றோம். மேற்போன்ற பல குறைகளை நீக்கிக்கொள்ள ஓர் சங்கம் ஸ்தாபனம் செய்துக் கொண்டோம்.

சங்கவாயிலாக வெளியிட்டுள்ள பல குறைகளுக்கும் "மித்திரன்" இடந்தந்து ஆதரித்ததோடு இப்போது நடத்தப்படும் இந்த இரண்டாவது மகாநாட்டிற்கு தலைமை வகித்து எங்கள் குறைகளை நீக்க முன்வந்தது எங்கள் சிறிது புண்ணியத்தின் பலனேயாகும். ஆதலின் எங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம். தாங்கள் தீர்க்காயுளுடன் திடசரீரியாய் வாழ எல்லாம்வல்லஇறைவனைப்பிரார்த்திக்கின்றோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

ஹுஷேன்பாக்ஷாசாஹேப்

தஞ்சாவூர் ஜில்லா கிராமஉத்தியோகஸதர்களுக்காக

வரவேற்பு கமிட்டி பிரசிடேண்ட்

அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்.

இம்மாதம் 8-ந் தேதி மேற்கண்ட மகாநாடு சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீமான் எ. ரங்கசாமி ஐயங்காரின் அக்கிராசனத்தின் கீழ் பாபநாசத்தில்கூடியது. அவர் செய்த அக்கிராசனப் பிரசங்கமாவது.—

கனவான்களே,

நமது தாய் நாட்டிற்கு மிகுந்த துக்ககரமான சம்பவம் நிகழ்ந்திருக்கும் சமயத்தில் நாம் இங்குக் கூடியிருக்கிறோம். பாரத மாதாவின் உத்தம புதல்வரும் நமது தலைவருமான லோகமான்ய பாலகங்காதர திலகர் நமக்காக வெகுவாகப் போராடி காரிய சித்தி அடையவிருக்கும் தறுவாயில் நம்மைத் தவிக்கவிட்டுப் போய்விட்டார். அவருடைய மரணத்தினால் நமக்கு விளைந்திருக்கும் துக்கத்தின் அளவையாவது அல்லது எதிர்பாராத விதமாக நமக்கு ஏற்பட்ட இந்த சகிக்க ஒண்ணாத நஷ்டத்தினால் நமக்கு ஏற்படும் பொருப்புகளையாவது நான் இந்தச்சந்தர்ப்பத்தில் விஸ்தரித்துச் சொல்ல வேண்டியதில்லை. நமது தாய் நாட்டின் சந்துஷ்டிக்காகவும் அபிவிருத்திக்காகவும் அவரும் நாமும் செய்துவந்த முயற்சிகள் சீக்கிரம் பலிதமடையும்படி அவருடைய ஆத்மாவானது நமக்கு வழி காட்டி காரியம் சித்திபெறச் செய்யுமாக,

பூர்வீகக்கிராம வரழ்வு.

கனவான்களே! மகா நாட்டில் தலைமை வகிக்கும்படி என்னை கேட்டுக்கொண்டு கௌரவப்படுத்தியதற்காக நான் உங்களுக்கு எனது மனப்பூர்த்தியான வந்தனத்தைச் செலுத்துகிறேன். நான் உங்கள் வருக்கத்தைச் சேர்ந்தவனல்லன். கிராம உத்தியோகஸ்தர் பதவியிலும் நான் இருந்ததில்லை. ஜனசமூகத்தாரின் க்ஷேமத்தை உத்தேசித்து உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் முக்கியமான பொறுப்புகளையும் நான் வகித்தவனல்லன். ஆயினும்இந்த ஜில்லாவிலுள்ளஎன்னுடைய சொந்தக்கிராமத்தில் கிராம முன்சீப்பு வேலையை என்னுடைய முன்னோர்கள் வெகுகாலம் வகித்திருந்ததால் உங்களுடைய விஷயங்களில் பரம்பரையை ஒட்டி எனக்கு சிரத்தையுண்டு. மேலும் நமது தேசத்தில் முக்கிய உத்தியோக வருக்கத்தினராக இருந்து வரும் உங்கள் வகுப்பினரின் அபிவிருத்தியிலும் எனக்குக் கவலையுண்டு. ஆனால் நமது தாய்நாட்டில் ஜனித்த ஒவ்வொரு இந்தியருக்கும் கிரமமாக உரித்தான சுகவாழ்வு, கண்ணியமான பதவி, தன் மதிப்பு முதலிய பேறுகளை நீங்களும் அடைவதற்குத் தகுதியான உபாயங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துச் சொல்ல போதிய அவகாசமாவது அல்லது அதற்கு வேண்டிய வசதிகளாவது எனக்கில்லை. இப்பொழுது இருந்து வரும் ஆட்சி முறையிலும் சரி, இனி புதிதாக ஏற்படப்போகிறதென்று நாம் எதிர்பார்த்திருக்கும் தேசீய வாழ்விலும் சரி, உங்களுக்கு தினே தினே அதிகரித்து வரும் உத்தியோக அலுவல்களையும் பொது ஜனங்களிடமுள்ள கடமைகளையும் நீங்கள் எவ்விதம் நிறைவேற்றி வைக்கவேண்டுமென்பதைச் சொல்லவும் நான் சக்தனல்லன். இருந்தாலும் என்னுடைய தொழில் முறைமையில் இந்த விஷயங்களை நான் அடிக்கடி கவனித்து வந்திருப்பதால் என்னுடைய மனதில் அப்போதைக்கப்போது உதித்துள்ள சில எண்ணங்களை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நமது தேசத்தின் சமூகப் பொருளாதார, ராஜீய வாழ்விற்கு அடிப்படையாகவுள்ளது கிராம வாழ்வு தான். புராதன காலத்தில் நமது கிராம வாழ்வு இருந்து வந்த பெருமையைக் கண்டு மேனாட்டு யாத்ரீகர்களும் சரித்திரக்காரர்களும் அதிசயப்பட்டிருக்கிறார்கள், அவ்வளவு ஒற்றுமையாக இருந்துவந்த நமது கிராம வாழ்வில் மேனாடுகளில் வழங்கி வந்த முறைகளை ஸர் தாமஸ் மன்ரோ வேண்டுமென்று கொண்டுவந்து புகவிட்டதினால், அது சீர்குலைந்து, ஒற்றுமை ஒழிந்து, அவரவர்கள் தத்தம் காரியத்தையும் சுயநலத்தையுமே கருதத்தலைப்பட்டுவிட்டார்கள். ஒருவரோடொருவர் போட்டி போட்டு, தத்தம் காரியத்தைப் பார்ப்பதே மேனாட்டாரின் குணம். பூமியிலிருந்து ராஜாங்கத்தாருக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தைச் சேகரிக்கவே இந்த முறை நமது கிராம வாழ்வில் கொண்டுவந்து புகவிடப்பட்டது. அதன் பலனாக குடிகள் காலக்ஷேபம் செய்வதே பெரும்பாடாகிவிட்டது. சமீப காலம் வரையில் தஞ்சாவூர் ஜில்லாவில் கிராம சமுதாய வாழ்வு மிகவும் சிறப்புற்றோங்கியிருந்ததென்றும், இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் ஸர் தாமஸ்மன்ரோ ரயத்வாரி முறையை அமுலுக்குக்கொண்டு வந்ததினாலேயே அது சிதறுண்டு போய்விட்டதென்றும் அதிகாரிகளால் வெளியிடப்பட்டிருக்கும் நூல்களிலிருந்தே நன்றாக ஏற்படுகிறது. இவ்வித முறை புகவிடப்படாமலிருந்தால் சரித்திரத்தின் போக்கு எவ்விதமிருந்திருக்குமென்பதை நாம் ஆராயப் புகுவோமானால் ஒரு விஷயம் முக்கியமாக ஏற்படுகிறது. ஏற்கனவே யிருந்து வந்த கிராம வாழ்வு குலைவுபடாமல் எப்பொழுதும் போலவே இருந்த காலத்திற்கேற்றபடி மாறியிருந்தால் அது சமூகத்திற்கே யல்லாமல கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் நன்மையாக இருந்திருக்கும். கிராம உத்தியோகஸ்தர்களும் வரி வசூலிலேயே திருஷ்டியுள்ள அன்னிய நாட்டினரின் சேவகர்களாகிவிடாமல் எப்பொழுதும்போல கிராமத்தார்களுக் குட்பட்டவர்களாக இருந்து வந்திருப்பார்கள். கிராம வாழ்வு சுகமாக இருந்துவரும். அவ்விதமிருந்து வந்த வாழ்வைக்குலைத்ததினால் உங்களுடைய அந்தஸ்தும் யோக்யதையும் பெருமையும் வெவ்விரம் பாதகமடைந்துவிட்டது, இது விஷயமாக ஸர் ஹென்ரி மெயின் செய்தவர்ணனை இன்னும் நமது மாகாணத்திற்குப் பொருத்தமுள்ளதாகவே இருக்கிறது. அவர் சொல்லியிருப்பதாவது:—

"ஒரு ஜன சமூகத்தில் கட்டுப்பட்டுள்ள ஒவ்வொருவருக்கும் வழக்கத்தை ஒட்டி பிரத்தியேக உரிமைகள் இருந்துவருமானால், அந்த சமூகத்தின் நிலைமை என்னவென்பதும், ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பூசொத்தில் என்ன உரிமை உண்டெண்ணுமென்பதும், ராஜாங்கத்தார் அவர்களிடமிருந்து தங்களுடைய வரியை வசூலிக்கச் செய்யும் ஏற்பாட்டிலிருந்து நிர்ணயமாகின்றன. உதாரணமாக, கவர்ன்மெண்டார் சமூகத்தலைவரை தங்களுடைய வரிக்கு ஜவாப்தாரியாக்குவார்களானால் பூசொத்துக்களில் அவருக்கே விசேஷ உரிமை ஏற்படுகிறது. அந்த சொத்துக்களில் பாத்தியமுள்ள மற்றவர்கள் சட்ட பூர்வமாக வேறு பாதுகாப்புகள் செய்து கொடுக்கப்பட்டாலன்றி, அந்தத் தலைவருடைய குடிகளாகி விடுகிறார்கள். அதே மாதிரியாக, கிராமத்தில் பூசொத்துடையவர்களனைவரும் ராஜாங்கத்தாரின் கடமைக்கு சேர்ந்தாற்போல் ஜவாப்தாரிகளாக்கிவிடப்பட்டால், தனிப்பட்டவர்களால் சொத்து விநியோகம் செய்யப்படுவது தடைப்பட்டுவிடுகிறது. ராஜாங்கத்தார் தங்களுடைய கடமையை ஒவ்வொருவரிடமும் நேரில் வசூல் செய்து கொள்ள ஆரம்பித்துவிட்டால், சமூக வாழ்வானது சிதறுண்டு விடுகிறது. இந்த சமூகமானது ஒன்றுபடும்படி இருந்த பந்தங்கள் நிவர்த்தியாகிவிட்டால் ஒருவருக் கொருவர் போட்டியும் துவேஷமும் உண்டாகி, ஒன்றுபட்டிருப்பது சிரம சாத்தியமாகிவிடுகிறது."

ஆகவே ஆதியில் இருந்துவந்த கிராம வாழ்வு நிலைத்திருந்து, காலத்திற்கு ஏற்றவாறு அதை மாற்றிக்கொள்ள விடப்பட்டிருக்குமானால், நம்முள் போட்டியும் துவேஷமும் அதிகமாயிருக்கின்றதென்று நமமுடைய எதிரிகள் சொல்லுவதற்கும் இடமிராதபடி பரிகாரங்கள் கண்டுபிடித்துவிடலாம். ராஜீய வாழ்வும் ஏற்பாடாக இருந்து வந்து இப்பொழுது நமக்கு வெகு அநுகூலமாக இருக்கும். அப்படிக்கில்லாமல் ரயத்வாரி முறையைக் கவர்ன்மெண்டார் கொண்டுவந்து புகவிட்டு தங்களுடைய கடமையை வசூலிப்பதற்காக அதிகாரி வர்க்கத்தின் நிர்வாக முறையை அதில் புகுத்தியதனால் கிராமாந்தரங்களில் பரம்பரையாகவோ அல்லது வேறு விதமாகவோ தொழில் செய்து வந்தவர்களின் அந்தஸ்து, கௌரவம் முதலியன சீர் குலைந்துவிட்டன.

கிராமத்திலிருந்து வசூலிக்க வேண்டிய கிஸ்திக்கு கிராமாதிகாரியே ஜவாப்தாரியாக இருந்த ஜில்லாக்களில் அப்படிப்பட்ட கிராமத் தலைவர் கவர்ன்மெண்டுக்கு நேரில் கடமைப்பட்டிருக்கும் தனித்தனி பட்டாதாரரிடம் கிஸ்தி வசூல் செய்யவேண்டிய பொறுப்பையுடைய வேலைக்காரராக ஏற்படுத்தப்பட்டார். அந்த உத்தியோகம் அவருடைய வாரிசுக்குக் கிடைக்குமென்றும் செய்யப்பட்டது. இவ்விதம் அவருக்குக் கிடைத்த பதவிக்குத் தக்க வரும்படி இல்லை. ஆனால் தலைமுறை வரிசையில் கிடைத்த பதவி என்ற உணர்ச்சியினால் அதை விட்டுவிட முடியவில்லை. கிராம முழுமையும் இன்ன கிஸ்தி கொடுக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக ஒவ்வொரு மிராசுதாரும் இன்ன கிஸ்தி கொடுக்கவேண்டுமென்று ஏற்பட்ட ஜில்லாக்களில் கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமத்திலிருந்து கூடியவரையில் எவ்வளவு அதிகம் வசூலிக்கலாமோ அவ்வளவு கிஸ்தியை வசூல் செய்யும் கவர்ன்மெண்டு ஏஜண்டாகவும் தற்கால கவர்ன்மெண்டாரது ஆட்சி முறையில் நடத்தப்படும் ஒவ்வொரு நிர்வாக காரியத்துக்கும் கவர்ன்மெண்டாரின் சேவகரும் ஏஜண்டுகளாகவே ஆகிவிட்டனர். தஞ்சை ஜில்லாவானது பின்னால் கூறப்பட்ட முறையில் சேர்ந்தது. ஆதன் பயனாக இந்த ஜில்லாவில் இருக்கும் வில்லேஜ் முனிஸிப்களின் பதவியானது வாரிசு முறை அனுஷ்டிக்கப்படும் இதர ஜில்லாக்களில் இருக்கும் தன்மையைவிட அதிகமாகக் குறைந்திருக்கிறது. ஆனால் 1895-வது வருஷத்தின் 3-வது ஆக்டின் கீழ் வருகிற கிராமத் தலைவரும் மற்ற அதிகாரிகளும் 1889 ௵ 1-வது ஆக்டின் படி வரும் கிராம உத்தியோகஸ்தர்களும் ஒரே தன்மையான அதிகார வரம்பிற்குக் கட்டுப்பட்டவர்களே; கிஸ்தி வசூல் தவிர மற்ற சில்லரை வேலைகளிலும் ஒரேமாதிரியான வேலை செய்கிறவர்களே; ஒரே மாதிரி சொற்ப வெருமானத்துடன் திருப்தியடையவேண்டியவர்கள்; கவர்ன்மெண்டாரின் ஏஜண்டுகளாய் முழு வேலையும் செய்துவரும் இந்த கௌரவத் தலைவர்களை அடக்கித் தாழ்மைப்படுத்தும் சிட்சாவிதிகளும் ஒரே மாதிரி தான்.

கிராம முன்ஸிப்.

தேச க்ஷேமத்திற்கு ஸாதகபாதகமான கடமைகள் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த போதிலும் கிராமங்களில் கௌரவம் வாய்ந்த தலைவர்கள் விரும்பத் தக்கதாகவில்லை இந்த உத்தியோகம். இந்த ஜில்லாவில் பிரிட்டிஷ் ஆட்சி முறை ஏற்பட்ட ஆதிகால முதற்கொண்டே இந்தப் பெரிய குறையுண்டு; காலி ஸ்தானங்கள் ஏற்பட்ட போதெல்லாம் கிராம முன்ஸிப் அல்லது தலைவர் வேலைக்கு பொறுப்பேற்றுக்கொள்ளத் தக்க தகுந்த மனிதர்கள் கிடைப்பதரிது என்பது ரெவினியூ இலாகாவின் இடைவிடாத புகார். பெரிய தனக்காரரை நியமிக்கும் முறை சாதாரணமாக வழங்குகின்ற பிற்பட்ட ஜில்லாக்களில், வில்லேஜ் முனிஸிப்கள் படித்தவர்களாக அகப்படாதது பெரிய இடையூறாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முன்னேற்றமடைந்த ஜில்லாக்களில், வார்சு உரிமையில்லாவிட்டாலும் வார்சு நியமனம் செய்யப்பெற்ற காலத்தில் பெரிய கஷ்டம் என்னவென்றால் கிராம ஜனங்கள் இந்த உத்தியோகத்தை மதிப்பதில்லையென்பதே. ரெவினியூ முறையில் இழிவான கடமைகளைச் செய்யுமாறு நேருமென்பதே இதற்குக் காரணமாகும். முன்பு கிராம உத்தியோகஸ்தர்கள் கிஸ்தி வசூலில் பிழை செய்வதாக சந்தேகப்பட்ட போதெல்லாம்சிட்சைஅடைந்து வந்ததால் வெகு காலமாக இந்த உத்தியோகத்தை மதிப்பாரில்லை.

1889 ௵ 1-வது ஆக்டுக்கு முன் அனுஷ்டானத்திலிருந்த 1816-ம் வருஷத்து பழைய விதிப்படி கிராம முனிஸிப் போலீஸ் அதிகாரத்தையும் நியாய நிர்வாகம் செய்யும் அதிகாரத்தையும் செலுத்தும்படி ஸர் தாமஸ் மன்ரோ செய்தார். ஆனால் சம்பளம் அவர் ஏற்படுத்தவில்லை. தஞ்சை ஜில்லா மானியூலில் கண்டபடி அந்த பிரயத்தனம் வியர்த்தமாகிவிட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் பெயருக்காக ஒரு தலைவர் நியமிப்பதே கலெக்டர்களுக்குப் பெரிய கஷ்டமாகிவிட்டது. 1850-ம் வருஷத்தில் கூட அப்போது சம்பளம் ஏற்பட்டும், முக்கிய மிராசுதார்கள் இவ்வேலையை ஏற்றுக்கொள்ளும்படி செய்வது கலெக்டருக்கு வெகு கஷ்டமாக இருந்தது.

இவ்விஷயத்தில் இடைவிடாமல் செய்யப்படும் புகார் இந்நாள் வரையிலும் தீர்க்கப்படாமலே இருக்கிறது. வில்லேஜ் முனிஸிப்களின் கடமைகளோ எல்லையின்றி விரிவாகிவிட்டன.

கிராம முன்ஸிப்கள் சமூக வாழ்வில் தம்மை உபயோகமுள்ள மனிதராகச் செய்துகொள்ள சாவகாசம், சாதனங்கள், போதுமான தன் மதிப்பு ஆகிய இவைகள் கிடைப்பதில்லை. தற்காலம் இருக்கும் நிலையில் கிராமத் தலைவர் அல்லது முனிஸிபின் கடமைகளை ஆராய்வோம். சம்பளக் குறிப்பில் கண்டபடி கிராமத் தலைவரின் கடமைகள் பின்வருமாறு :—

1. கிஸ்தி வசூல்.

2. சொற்ப ஸிவில், கிரிமினல் விவகாரங்களைத் தீர்த்து வைத்தல்.

3. போலீஸ் கடமைகள், குற்றங்களை தடுப்பது, கண்டுபிடிப்பது, நியாய ஸ்தலத்திற்குக் கொண்டு வருதல், இயற்கைக்கு மாறான அல்லது திடீரென நேர்ந்த மாணங்களைப்பற்றி அறிவித்தல், பொதுவாக போலீஸார் குற்றங்களைக் கண்டுபிடிக்கச் செய்யும் பிரயத்தனங்களுக்கு உதவி செய்தல்,

4. ஜனன மாண ரிஜிஸ்டர் பதிவு செய்தலும் அம்மை குத்தின குழந்தைகளின் ரிஜிஸ்டர் வைத்திருத்தலும்.

5. கால்நடை பவுண்டுகளை நிர்வகித்தல்.

(இன்னும் வரும்.)

தஞ்சை ஜில்லா மகா நாடு

14-வது கூட்டம்

அக்கிராஸனாதிபதியின் பிரசங்கம்

இம்மாதம் 7, 8 ந் தேதிகளில் மேற்கண்ட மகாநாடு ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அக்கிராசனத்தின் கீழ் பாபநாசத்தில் கூடியது. அவ்வமயம் அவர் செய்த அரிய பிரசங்கத்தை, நேயர்கள் படிக்கவேண்டி, நாம் கீழேவெளியிட்டிருக்கிறோம்:—

சகோதரப் பிரதிநிதிகளே, ஸ்திரீ ரத்தினங்களே, கனவான்களே,

தஞ்சாவூர் ஜில்லா மகா நாட்டின் 14-வது கூட்டமாகிய இந்த மகா சபையில் நான் அக்கிராஸனம் வகிக்கும்படி செய்து நீங்கள் கௌரவப்படுத்தியதற்கு உங்களிடத்தில் நான் மிக்க நன்றியுள்ளவனாக இருக்கிறேன். சென்னை ஸாவகலா சாலையின் பிரதிநிதியாகச் சட்டசபையில்ஸ்தானம்பெற நான் அபேட்சித்ததை முதல் முதல் உங்களுடைய ஜில்லா தான் ஆதரித்தது. ராஜியக் கூட்டத்தில் நான் அக்கிராஸனம் வகிக்கும்படி முதல் முதல் என்னை அழைத்தது உங்களுடைய ஜில்லா தான், இதை நான் மறக்க முடியாது. நான் உங்களுக்கு அன்னியனுமல்ல. என்னுடைய தாய்க்கு இந்த ஜில்லா பிறந்தகமானதையால், எனக்கும் இது பிறந்தகந்தான். உங்களுடன் எப்பொழுதுமிருந்து இந்த ஜில்லாவின் நிலைமை இதன் தேவைகள் முதலியவைகளை நன்கறிந்துள்ள ஒருவர் அக்கிராஸனாதிபதியாக விருக்கவேண்டியது கிரமமென்று நான் நினைக்கிறேனாயினும், எங்கும் நிலைமை ஒன்றுபோல் தானிருக்கிறது. எங்கும் குறைகள் பொதுவாகவே இருக்கின்றன, ஏனெனில்நிர்வாகத்திலுள்ள தோஷங்கள் எங்கும் ஒன்றுபோலவே இருக்கின்றன என்பது எனக்கு நாளாகவாக விளங்குகிறது. தேசத்திற்கு முக்கியமான விஷயங்களைப் பற்றி ஜில்லா மகாநாடுகளில் தான் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது; ஸ்தலத்தின் தேவைகளை உத்தேசித்து தேசத் தேவைகளை அலட்சியம் செய்து விடவுங் கூடாது; ஏனெனில் ராஜீய உணர்ச்சியும் உழைப்பும் ஒரு ஜில்லாவில் உச்ச ஸ்திதியிலிருந்தாலொழிய, ஸ்தல சம்பந்தமான பிரச்னைகளையும் திருப்திகாமாகப் பைசல் செய்வது கூடாத காரியம்.

லோகமான்ய திலகர்.

மகத்தான துக்கம் நம்மைப் பீடித்திருக்கும் சமயத்தில் நாம் இன்று கூடுகிறோம். தேசமெங்கும் ஜனங்கள் துக்கத்தில் மூழ்கிக்கிடக்கிறார்கள். ஸ்ரீமான் பாலகங்காதர திலகர் காலகதியடைந்துவிட்டதானது இனி நிவர்த்திசெய்ய முடியாத பெரிய நஷ்டம் என்று நமது மனம் துடிக்கிறது; அவர் ஜனங்களை நடத்தப் பிறந்தவர், பெரிய ராஜதந்திரி, கடைசி நிமிஷம்வரையில் அந்த சாமர்த்தியம் அவரிடத்தில் பிரகாசித்தது; மௌனமாகவும் எப்பொழுதும் உஷாருடனுமிருந்து கொண்டு உழைத்தவர்; பிரயாசைப்பட அவருக்கிருந்தகுணத்திற்கு அளவில்லை; கஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டாலும் அவருடைய அஞ்சா நெஞ்சு தளர்ந்ததில்லை; அதிதீரன், ஒரு காரியத்தைச் செய்யக்கூடாமல் இடையூறுருந்தால், அந்தக்காரியத்தைச் செய்தே முடிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொள்பவர், ஒரு கார்யத்தில் அவர் பிரவேசிப்பதைத் தடுக்க யாராவது அவரைத் தூஷித்தால், அது அவருக்கு ஒரு தூண்டுதலாக இருக்கும்; முடிவில் வெற்றி அடைவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் அதிக சமர்த்தர்; அவருடைய புத்தி சஞ்சலப் பட்டதேயில்லை; கணக்கற்ற அவருடைய சிஷ்ய ஜனங்களால் போற்றப்படத்தகுந்தவர், அப்படியே போற்றப்பட்டவர்; தேசத்தின் சுவதீனத்திற்காகப் போராடி வரும் சேனையின் தலைவர்; ஆயுள்காலமெல்லாம் கீதையை மனதில் தியானம் செய்து கொண்டும் வாயினால் சொல்லிக் கொண்டும் சந்தோஷ சித்தராக அவர் இருந்தது போலவே இறந்தும் போனார்; சிந்தனை செய்யும் சக்தியும் கிளர்ச்சியுமுள்ள இந்தியர்கள் எல்லோரும் தேசியக கட்சியினராகும்படி அவர்செய்துவிட்டார்; எதற்குமஞ்சாத அவருடையசுவாதீனப் பிரியமும் எதையும் தியாகம செய்ய அவர் தயாராகவிருந்ததும், ராஜியத்துறையில் சுகங்களை விடக் கஷ்டங்களையே அனுபவிக்கும்படி மனோதைரியத்தை அவருக்குக்கொடுத்த அவரது தேசாபிமானமும், அபிப்பிராய பேதங்களைச் சமரஸப்படுத்தி காங்கிரஸ் காரர்கள் ஒற்றுமையாக விருக்கும்படி செயய அவருக்கிருந்த சாமர்த்தியமுமே தேசியக் கட்சி தேசமெங்கும் வியாபக மடைந்ததற்குக் காரணங்கள். அவருடைய ஞாபகார்த்தமாக எதைச்செய்வது உத்தமமெனில், அவர் நமக்குக் கற்பித்துள்ள பாடங்களின்படி நாம நடப்பதேதான்; அந்தப் பாடஙகள் என்ன வென்றால், ஆண்தன்மையுடன் கூடிய தேசபக்தி, நிர்த்தோஷமான கட்டுப்பாடு, ஆடம்பரம் செய்யாத பலம், ஆரஅமரயோசனை செய்து ஏற்பட்ட தீர்மானம், பின்வாங்காமல் கார்யம் செய்தல் ஆகியவைகளேயாகும். கோகலே, திலகர், காந்தி, லஜபதிராய், மாலவியா ஆகிய இந்த பெயர்களுமே புது இந்தியாவின் சேனாதிபதிகள் என்று பிற்காலத்தவர்கள் மதிப்பார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்த தீரர்கள் இந்தியாவில் பிறந்திருக்கையில், இந்தியா இனி நற்கதி அடையாதென்று யார் சொல்லமுடியும்? திலகர் இறந்து போய் விட்டதால், நமக்கேற்பட்டிருக்கிற நஷ்டத்திலிருந்து வெகு திறமையான சட்டுப்பாடு நமக்குள் ஏற்படவேண்டு மென்பதையும் ஒற்றுமையாக நின்று நாம் இனி போராடவேண்டு மென்பதையும் நம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது.

(இன்னும் வரும்.)

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

தஞ்சை ஜில்லா 14-வது மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒரு பாகத்தை இந்த வாரத்தில் பிரசுரிக்கிறோம். மற்றவைகளை அடுத்தப் பத்திரிகையில் வெளியிடுவோம்:—

துக்கம்.

ஸ்ரீமான் லோகமான்ய பாலகங்காதர திலகர், ஸ்ரீமான் வி. கண்ணன் செட்டியார், ஸ்ரீமான என். கே. இராமசாமி ஐயர் முதலிய மகான்கள் இறந்துபோனதைக் குறித்து விசனிப்பதாகவும் இதன் அனுதாபத்தை அவரவர்களின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக்கொள்வதாகவும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

ஜமாபந்தி.

இப்போது வழங்கிவருகிற ஜமாபந்தி முறையை விட்டுவிடவேண்டுமென்றும் கிராமக் கணக்குகளை அவ்வந்த கிராமத்தில் வருஷஆடிட் செய்யவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

சில்லரைத் தொழில்கள்.

சிறு தொழில்கள் அபிவிருத்தி சம்பந்தமாகத் தொழில் கமிஷனர் செய்த சிபார்சுகளின்படி கவர்ன்மெண்டார் முயற்சிகளெடுத்துக்கொள்ளவேண்டுமென்றும், அவைகளின் அபிவிருத்திக்காகக் கூட்டுறவுச் சங்கங்களைக் கைகொள்ளவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

அகவிலை,

எல்லாச் சாமான்களின் அகவிலையினால் ஜனங்கள்படும் கஷ்டங்களை உத்தேசித்தும், முக்கியமாக வாழ்க்கைப் பொருள்களின் விலை ஏற்றத்தைக் கருதியும், ஜனங்களின் கஷ்டங்களை நிவிர்த்திசெய்பதற்கு பரிகார முறைகளைக் கையாளவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் வற்புறுத்துகிறது

எரு.

மங்கநல்லூர் முதலியபண்ணைகளையொட்டியுள்ளவிடங்களில் சாஸ்திரீக எருக்களை விவசாய அபிவிருத்திக்காகச் சேகரித்து வைத்து அவைகளை மிராசுதார்களுக்குக் கொள்விலையில் விற்கவேண்டுமென்றும், மிராசுதார்களை கூட்டுறவுச்சங்கக்கம்பெனியாகச் செய்துகொள்ளும் வகையில் கவர்ன்மெண்டார் அவ்வாறு செய்யவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

சத்திரம்.

(a) எல்லாச் சத்திரங்களிலும் ஏழைகளுக்கு இப்போது கொடுக்கப்படும் பணம் போதாதாகையால் உணவுப்பொருள்களாக அவர்களுக்குக் கொடுக்கும் வழக்கத்தைக் கைக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்றும் ஜில்லா போர்டாரை இக்கான்பரன்ஸ் வேண்டிக் கொள்ளுகிறது,

(b) உஞ்சவிருத்திக்கு விண்ணப்பம் செய்துகொள்ளுவதை இவ்வளவுக்குமேல் போகக்கூடாதென்றுக் கட்டுப்படுத்தக்கூடாது.

(c) சத்திரம் செலவை உயர்ந்த கிரேடுகளில் குறைக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் ஜில்லா போர்டைக் கேட்டுக்கொள்கிறது.

தர்ம சோத்துக்கள்.

(a) தர்ம சொத்துக்களைச் சரியாக நிர்வாகம் செய்யும்பொருட்டு இராஜப்பிரதிநிதி சட்டசபையில் ஒரு மசோதா கொண்டு வரப்படவேண்டுமென்றும், வெகு காலமாக இருந்துவரும் இவைகளின் நிர்வாக ஊழல்களை ஒழிப்பதற்கு மாகாணச் சட்டசபையினருக்குப்போதிய அதிகாரமிருக்கவேண்டுமென்றும் இககான்பரன்ஸ் வேண்டிக்கொள்கிறது.

(b) ஜில்லாவிலுள்ள தேவஸ்தானம் கமிட்டியார் தங்கள் கீழிருக்கும் கோயில்கள், மடம் முதலியவைகளின் கணக்குகளை வருஷாவருஷம் ஆடிட்செய்து அதைப் பத்திரிகைகளில் வெளியிடவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்கிறது.

தஞ்சையில் காலேஜ்.

தஞ்சையில காலேஜ் ஒன்றில்லாததால், பெற்றோர்களும் மாணவர்களும் பல கஷ்டங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உட்படுகிறார்களென்றும், ஆதலால் சத்திரம்பணத்திலிருந்து தஞ்சை நகரில் ஒரு ஸெகிண்ட் கிரேடு காலேஜாவது ஜில்லா போர்டார் ஏற்படுததவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்கிறது.

கிராம சுகாதாரம்,

கிராம சுகாதாரத்தை அபிவிருத்தி செய்ய இப்போதுள்ள பஞ்சாயத்து சபைகளும் கூட்டுறவுச் சங்கங்களும் முயற்சியெடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்த ஜில்லாவிலுள்ள எல்லாபோர்டுகளை, இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்கிறது.

பாசனக் கமிட்டி.

இப்போது பாசனவசதிகளிலுள்ள குறைகளையும் பாசனமுறைகளையும்பற்றி விசாரித்து அறிவிக்கக்கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தவேண்டுமென்றும், இக்கமிட்டியில் ஒரு இஞ்சினியரும், கலெக்டரும், உத்தியோகஸ்தரல்லாத சிலமிராசுதார்களும் அங்கத்தினர்களாகவிருக்கவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது.

கும்பகோணம் காலேஜ்.

கும்பகோணம்காலேஜ் ஆனர்ஸ் டிகிரீ கோர்ஸில் [illegible]க்கவேண்டுமென்றும், முதன்முதல் என்ன பாடங்களைவைக்கக்கூடுமானாலும், அவைகளை வைக்கவேண்டுமென்றும் இக்கான்பரன்ஸ் கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

சுதேசியம்.

வீட்டுக் கைத்தொழில்களும் மில் தொழில்களும் விருத்தியாகி ஜனங்களின் பொருளாதார நிலை முன்னேற்றம்பெற ஜனங்கள் சுதேசியக்கொள்கைகளை ஆதரித்து அவைகளின்படி அனுஷ்டிக்கவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் ஜில்லாவாசிகளைக் கேட்டுக் கொள்கிறது

(6ம் பக்கம் பார்க்க.)

தஞ்சாவூர் ஜில்லா எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்கள் சங்கம்.

நாளது 1920 ஸு ஆகஸ்டு மீ 7 உ. தஞ்சை ஜில்லா பாபநாசத்தில் நமது எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் பொது மீட்டிங்கு ஒன்று ஜில்லா சங்கம் ஸ்தாபிக்கும் நிமித்தம் கூடிற்று. கும்பகோணம், மன்னார்குடி, நன்னிலம், நாகப்பட்டணம் முதலிய தாலுக்காக்களில் ஏற்கனவே போர்டு முன்சிபல் எய்டெட்ஸ்கூல்களுக் கென பிரத்தியேகமானதும், பொதுவானதுமான சங்கங்கள் நம் முன்னேற்றத்தின் நிமித்தம் ஸ்தாபிக்கப் பட்டிருப்பவை பிரதிநிதிகளைத் தேடி எடுத்து அனுப்பி யிருந்தன. பாபநாசம், திருத்துறைப்பூண்டி ஆகிய தாலுக்காக்களி னின்றும் உபாத்தியாயர்கள் ஆஜராகி யிருந்தனர்.

மன்னார்குடி தாலுக்கா, நீடாமங்கலம் வாசியும் விவசாய ஐக்கிய நாணயச் சங்கங்களின் கௌரவ உதவி டைரெக்டருமான ராவ் சாயிப். ஸ்ரீமான் A. சேதுராமய்யரவர்கள் ஷை ஜில்லா சங்கத்தின் சேர்மென் ஸ்தானம் வகித்து மகாநாட்டை நடத்தி வைத்தனர். ஸ்ரீமான்களான ராவ் பகதூர K. S. வேங்கட்ட ராமய்யரவர்களும், முடிகொண்டான் மிஸ்டர் V. மகாதேவய்யரும் சங்கத்தின் மீது கிருபை கூர்ந்து ஆஜராகி யிருந்தார்கள்.

1. ஜில்லாவின் பல பாகங்களிலும உள்ள எல்லாச சங்கங்களையும் ஜில்லா சங்கத்தில் இணைத்து விடவும், சங்கம் இல்லாத விடங்களில் பிரசார வேலை செய்யும் நிமித்தமும் ஏற்பாடு செய்யலாமென்றும் முடிவாயிற்று.

2. ஜில்லா சங்கத்திற்கு அக்கிராசனர், காரிய தரிசி பொக்கிஷதார், நிர்வாகக் கமிட்டியார் முதலியவர்கள் பொருக்கி எடுக்கப் பட்டனர்.

3. சங்கத்திற்கான விதிகளை ஏற்பாடு செய்ய 5 மெம்பர்கள் கூடிய ஸ்பெஷல் கமிட்டி நியமிக்கப் பட்டது.

4. தஞ்சாவூர் ஜில்லா எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் மகா நாடு 23-10-20 ல் கும்பகோணத்தில் நடத்த வேண்டு மென்றும், ஷை காரியத்தை கும்பகோணம் தாலுக்கா காரியதரிசி Mr. R. வெங்கட்டராமய்யரவர்களே செய்து முடிக்க வேண்டு மென்றும், மற்றக் காரிய தரிசிகளும் அதற்கு உதவியா யிருக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப் பட்டது.

பிறகு அக்கிராசன ரவர்களுக்கும், விஜயம் செய்திருந்த கனவான்களுக்கும், கட்டடம் கொடுத்து உதவிய காண்பரென்ஸாருக்கும், மகா-ா-ஸ்ரீ காரியதரிசி யவர்களுக்கும் மனமார்ந்த வந்தன மளிக்கப்பட்டு மீட்டிங்கு முடிந்தது.

பி. பில்லுராவ்.
காரிய தரிசி.
தஞ்சாவூர் ஜில்லா எலிமெண்டரி ஸ்கூல்
உபாத்திமைச் சங்கம்
நீடாமங்கலம்.

லோகல் முனிசிபல் கான்பரன்சு.

சென்ற மாதம் 17-ந் தேயில் ஸ்தல ஸ்தாபன கான்பரன்ஸ் ஸர். பி. இராஜகோபாலாச்சாரியார் அக்கிராசனத்தின் கீழ்கூடியதை நேயர்கள் அறிவார்கள். அதில் பத்திராகாசிரிய நிருபர்களை வெளியே போகச்செய்து ஷை கான்பரன்ஸை ரகஸியமாய்க் "கூட்டியதன்" நோக்கம் என்னே? என் பத்திரிகாசிரிய நிருபர்களை உள்ளே விட்டிருக்கக்கூடாது? பொது ஜனங்களை ஏன் அவமானம் செய்தார்கள்.? மேலும் ஸ்தல ஸ்தாபனங்களிலுள்ள ஊழியர்கள் ஷை கான்பரன்

வின் முடிவை ஆவலாய்த் தங்களுக்கு ஏதாகிலும் சம்பள உயர்வு கிடைக்குமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். முடிவில் சென்ற 23-7-20 ல் மித்திரனில் வெளிவந்த விஷயத்தை நோக்குங்கால் சில பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும் ஆபீஸ் சிப்பந்திகட்கும அதாவது எல். டி. பட்டம் பெற்றவர்கட்குமாத்திரம் ஆறுதல் ஏற்பட்டதே ஒழிய பாக்கி ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள், பியூன் முதலிய ஏழை சிப்பந்திகளின் குறைகளை கவனிக்காமலும் அவர்களின் சம்பள விஷயத்தில் யாதொரு திட்டமும் தயாரிக்காமலும் விட்டுவிட்டது மிகவும் விசனிக்கத் தக்கதே. ஒவ்வொரு முனிசிபாலிட்டியிலும் தாலுக்கா போர்டுகளிலும் நூற்றுக்கணக்கான ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். அவர்களின் தற்கால சம்பளமோ கேவலம் கைதிக்குப் போட்டிருக்கும் திட்டம் போல் 12 ரூ வாங்குகிறார்கள். இது விஷயமாய் ஒவ்வொரு கிராமம், தாலுக்கா ஜில்லா முதலிய மாகாண முழுவதிலும் தற்காலத்திலுள்ள கவர்ன்மெண்டு சிப்பந்திகட்கு முன்னமே சங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். சமீபத்தில் பல கான்பரன்சுகள் நடத்தி அதன் மூலமாயும் காருண்ய அரசாங்கத்தாருக்குத் தெரியப்படுத்தி வந்திருக்கிறார்கள். அப்படி யிருக்க, இவர்கள் குறைகளைச் சந்தர்ப்பம் வாய்த்த காலத்திலும் கவனியாதது ஏனோ! சம்பளக் கமிட்டியாராவது ஒருவாறு 30 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சிபார்சு செய்தனரே! அதன்படியாவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது 499 நிர் G-O-பிரகாரம் 4 ரூபாய் ஏப்ரல் முதல் கொடுக்கும்படி அரசாங்கத்தார் உத்திரவு இட்டார்கள். அதையாகிலும் கொடுத்தார்களா? உலக முழுவதும் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு ஜனங்கள் வருந்தும் இந்நாளில் இவ்வாறு அரை வயிற்றுக்குக்கூட போதாமல், மக்களையும் குடும்பத்தையும் வருந்தவிட்டு, பொது ஜனங்களின் மக்கட்குக் கல்வி எவ்வாறு கற்றுக்கொடுக்கக் கூடும்.

கல்வி இலாகாவிலுள்ள அதிகாரிகளோ பிள்ளைகட்குச் சுகாதாரவிஷயத்திலும் தேக அப்பியாசத்திலும் பிள்ளைகளைத் தேர்ச்சி செய்யவேண்டுமென்கிறார்கள். உபாத்தியாயர்களோ தங்கள் சுகாதார விஷயத்திலும், தேகாப்பியாசத்திலும் உயிரைக்கையில்பிடித்துக்கொண்டுவருந்துகின்றனர்கள் இப்படியிருக்க இவர்கள் எங்ஙனம், குழந்தைகளுடையசுகாதாரம், தேகப்பயிர்ச்சிமுதலியவற்றை நன்கு கவனிக்க இயலும்? காபிடேஷன் அலவன்ஸு பிரதி வருஷத்தில் மே மாசத்தில் உபாத்தியாயர்கட்குக் கொடுக்க வேண்டுமென்று கல்வியிலாகா விதியில் சொல்லியிருந்தும் அம்

மாதிரி கொடுத்து வருகிறார்களா? அதுவும் 1919-20 வருஷத்திய கிராண்டு இன்னம் கொடுபடாமலே இருக்கிறது. பல விதத்திலும் இவ்வெளிய ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களை வதைத்துத் துச்ச சாகரத்திலேயே மூழ்கிக்கிடக்க விடுவது பொருந்துமோ? இதனால் தான் தொண்டை ரத்தம் சிந்தக் கத்திவிட்டு அற்ப ஆயுளுடன் இறந்து விடுகிறார்கள். இங்கிலாந்து முதலிய இடங்களில் மனிதர்கள் சராசரி 40, 50 வயது ஜீவிக்கிறார்கள். இந்தியாவிலோ சராசரி 23 வருடத்திற்கு மேல் ஜீவிக்காமல் அற்ப ஆயுளுடன் இறப்பதும் காருண்ய அரசாங்கத்தார்க்கு விளங்கத் தெரிந்ததே.

ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள அதிகாரிகட்கு இவர்களின் கஷ்டம் தெரிந்திருந்தும் ஏன் இவர்கள் பால்பரிந்து ஒரு திட்டம் தீர்மானத்தில் சேர்க்கக்கூடாது? ஒவ்வொரு ஸ்தல ஸ்தாபனங்களிலுமுள்ள அதிகாரிகட்கு தங்கட்குக் கீழுள்ள சிப்பந்திகளின் குறைகள் நன்கு தெரிந்திருந்தும் உபாத்தியாயர்களைக் கவனிக்காமல் விட்டு விட்டது மிகவும் வருந்தற்பாலதே? மேலும் தங்கள் ஸ்தல ஸ்தாபனத்தில் பணம் இல்லையென்று ஓலமிட்டுக்கொண்டிருப்பவர்கள் அரசாங்கத்தாரிடத்தில் ஏன் பணம் சகாயம் செய்யும்படி கேட்கவில்லை? காருண்யமுள்ள அரசாங்கத்தார் வருஷந்தோறும் ஏராளமான பணம் கல்வி விஷயத்திற்குச் செலவு செய்துகொண்டு வருகிறார்கள். அப்படி யிருக்க சகாயம் செய்ய மாட்டேன் என்று சொல்லுவார்களா? அநேக ஸ்தலஸ்தாபனங்கட்கு அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் திரவியத்தைச் செலவு செய்யாமல் வைத்திருந்து பணம் சகாயம் செய்யென்றால் செய்வார்களா? இதைப் பொது ஜனங்கள் கேட்கலாகாதா? இப்படிக் கெல்லாம் விட்டுவிட்டு ஏழை உபாத்தியாயர்களைக் கவனிக்காமற்போனால் சுதந்தரம் கிட்டுமோ? நீங்கள் கோருகிற கோரிக்கை ஈடேறுமா? உலகத்தில் அமைதி ஏற்படுமோ? கவ்வ்பாவுமா? இந்தியா முன்னேற்றம் அடையுமா? இதை யோசியுங்கள். இன்னும் இம்மாதிரியேஏழைஉபாத்தியாயர்களைப்பரிதபிக்க விட்டீர்களே யாயின்பல கஷ்டங்களுண்டாகும் என்பது திண்ணம். ஆகையால் லோகல், முனிசிபல் சேர்மென், பிரசிடெண்டுகள் தக்க முயற்சிகள் எடுத்துஏழை உபாத்தியாயர்களது முன்னேற்றத்தை நாடுவார்களாக.

வருந்தும் ஓர் ஆசிரியன்.

என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதற்பெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.
" ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனால்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,

நான் தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0
சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.
விலாஸம்:—

பி. எஸ், ராய், புதுவை.

13. ஜில்லா போர்டின் நிர்வாசச் செலவு ரூ 42,234. மொத்த வருவாயில் சுமார் நூற்றுக்கு 2 வீதம் செலவாயிருக்கிறது.

14. கல்வி:— இந்தத் தலைப்பிற்குச் செலவான மொத்தத் தொகை 29,8850 ரூபா. இதில் 23,26,56 ரூபா எலிமென்டரி கல்விக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 22 எலிமெண்டரி பள்ளிக்கூடஙகள் அதிகம் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மொத்தம் 444 எலிமெண்டரி பள்ளிக்கூடங்களில் 195 ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடங்களும், 37 பெண்பிள்ளைகள் பள்ளிக்கூடங்களும் கவர்ன்மெண்டார் கொடுக்கும் பணத்திலிருந்து நிர்வகிக்கப் படுகின்றன. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களின் தொகை 26,352. 75 பள்ளிக்கூடங்கள் பஞ்சமர் களுக்காகவும் மற்றத் தாழ்ந்த வகுப்பினர்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இப் பள்ளிக்கூடங்களில் 3092 ஆண் பிள்ளைகளும் 283 பெண் பிள்ளைகளும் படிக்கிறார்கள்.

ஐந்து ஸெகண்டரி பள்ளிக்கூடங்களில் இரண்டு பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டு பணத்தினாலும் மூன்று போர்டு பணத்தினாலும் நிர்வகிக்கப் படுகின்றன. எல்லாம் ஆறாவது பாரம் வரையில் இல்லாத பள்ளிக்கூடங்கள். இவைகளுக்கு ஆகும் செலவு 42,250 ரூபா. இவைகளில் படிக்கும் மாணவர்களின்தொகை 1048. ஸெகண்டரி ஸ்கூல்களில் படிக்கும் ஒரு பையனுக்குச் செலவாகும் பணம் 27-9-11 ஆகிறது. எலிமெண்டரி பாடசாலைகளில் ஒரு பையனுக்குச் செலவாகும் பணம் ரூ 8-8-9 ஆகிறது.

இவைகள் தவிர ஜில்லா போர்டார் திருவாதியில் ஒரு சம்ஸ்கிருத காலேஜ் வைத்து நடத்துகிறார்கள். இந்தக் காலேஜில் யூனிவர் ஸிடி பரீட்சைக்குச் சென்று சிரோன்மணி வித்வான் முதலிய பட்டங்கள் பெறுவதற்கும் பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன- இதில் மொத்தம் 99மாணவர்கள் படிக்கிறார்கள். சென்ற வருஷம் பரிட்சைக்கு அனுப்பப்பட்ட 52 மாணவர்களில் 34 மாணவர்கள் தேறியிருப்பது விசேஷமாகும். காலேஜின் வேலை திருப்திகா மாயிருக்கிறது. இதில் பிராமணரல்லாதார்களும் படிக்கிறார்கள். நூறு மாணவர்களுக்குத் தங்கி வாசிக்க சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு ஸெஷனல் பள்ளிக்கூடங்கள். நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு ஆகும் செலவு 6718 ரூபா. காலேஜுக்குச் செலவாகும் தொகை போர்டின் செலவுகள் உள்பட 15971 ரூபாவாகிறது. இவைகளன்னியில் பாளையங்கோட்டை குருடு, செவிடு ஊமையர்கள் பள்ளிக்கூடங்களுக்கு 300 ரூபாயும், உபாத்தியாயத் தொழிலுக்குப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு 946 ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

15 வைத்திய உதவி:— லோகல் போர்டுகளால் ஏழு ஆஸ்பத்திரிகளும் 25 டிஸ்பென்ஸரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (எந்தெந்த விடத்தில் ஆஸ்பத்திரிகளும் டிஸ்பென்சரிகளுமிருக்கின்றன; ஒரு நோயாளிக்குச்சிகித்சை செய்ய செலவு என்ன வாகிறது? என்பவைகளை அடுத்த வாரப் பத்திரிகையில் அறிவிப்போம்)

16. அம்மை குத்தல்— புது முறைப்படி அம்மை குத்துவது அவசியமென்ற கவர்ன்மெண்டார் விரும்பிய பிரகாரம் 1918 ம் வருஷம் ஏப்ரல் முதல் தேதி முதல் ஜில்லாவிலுள்ள 24 யூனியன்களில் அம்மை குத்துவது கட்டாயமாகச் செய்யப்பட்டது. பரீட்சார்த்தமாகத் தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், பாபநாசம், நன்னிலம் முதலிய தாலுக்காக்களில் அம்மை குத்தும் வழக்கம் கட்டாயமாகச் செய்யப்பட வேண்டுமென்று போர்டார் கேட்டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் இன்னும் உத்தரவு பிறப்பிக்க வில்லை.

17. சுகாதாரம்:— சுகாதாரத்திற்கான செலவு 53,573 ரூபா. இதில் யூனியன்களுக்குச் செலவான தொகை 42,446 ரூபாயும் சேர்க்கப் பட்டிருக்கிறது. இத்துடன் சுகாதார அபிவிருத்திக்கு 22903 ரூபா செலவழிக்கப் பட்டிருக்கிறது. பட்டுக்கோட்டை தாலுக்காவைத் தவிர மற்ற ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு சானிடர் இன்ஸ்பெக்டர் வேலை செய்தார். இவரோடு மற்றொரு சானிடரி உத்தியோகஸ்தரும் ஜில்லா மெடிகல் ஆபீஸரின் பார்வையில் வேலை செய்து வந்தார்கள். சானிடர் அஸிஸ்டெண்ட் பத்து யூனியன்களையும், 2½ கிராமங்களையும் பார்வை யிட்டனர். பிரஸ்தாப வருஷத்தில் பிளேக்கும் மலேரியாவும் ஜில்லாவில் பரவ வில்லை. ஆனால் பெரியம்மை பலமாகவிருந்தது. வருஷத்தில் ஒன்பது மாதங்கள் வரையில் காலரா ஜில்லா முழுமையும் பரவியிருந்தது.

பாபநாசம், நீடாமங்கலம், கொரடாச்சேரி, முடிகொண்டான், எட்டுகுடி, பாபா கோவில், அந்தணப் பேட்டை, பட்டுக்கோட்டை முதலிய விடங்களிலுள்ள கிராமங்களை விசாலப்படுத்த யோசனைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர், நாகப்பட்டணம் தாலுக்கா போர்டுகளுக்குப் புதிய கிணறுகளை வெட்டவும், ஏற்கனவே யுள்ள கிணறுகளைப் பழுது பார்க்கவும் 360 ரூபாயும் 2090 ரூபாயும் முறையே கொடுக்கப் பட்டிருக்கிறது. மிகுதியுள்ள 595 ரூபாயும் இந்த வருஷம் தாலுக்கா போர்டுகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப் படும்.

19. மிருகவைத்திய உதவி:—தஞ்சாவூரிலுள்ள மிருகவைத்திய ஆஸ்பத்திரியும், நாகப்பட்டணத்திலுள்ள மிருகவைத்திய டிஸ்பென்ஸரியும் நல்ல வேலைகள் செய்து வருகின்றன. கும்பகோணத்திலுள்ள டிஸ்பென்ஸரியும் ஒரு கமிட்டியின் பார்வையிலிருந்து வருகிறது.

20. சத்திரங்கள்:—இவைகளுக்காகச் செலவானது மொத்தம் ரூபா 1,84,929 ரூபாவாகும். சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷத்தில் 1,89,180 ரூபா செலவழிக்கப்பட்டது. என்டோமென்ட் பணங்கள் நான்குபோர்டின் பாடசாலைகளுக்கும், ஏழு ஆஸ்பத்திரிகளுக்கும், வைத்திய சாலைகளுக்கும், ஏழைகளுக்கு உலுப்பைகள் கொடுக்கவும், யாத்திரிகர்களுக்கு அன்னமளிக்கவும், உபயோகப்படுகின்றன. இவைகள் தவிர 15,100 ரூபா தஞ்சாவூரிலிருக்கும் பிரதம ஆஸ்பத்திரியின் செலவுக்குக் கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கப் படுகிறது. கும்பகோணத்திலிருக்கும் குஷ்டரோகசாலைக்கு 500 ரூபாயும், ஜில்லா பீஸ்மெமோரியல் நிதிக்கு 5000 ரூபாயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சத்திரம் பாடசாலைகளில் குழந்தைகளுக்குச் சாப்பாடுபோடுவதையும் சேர்த்து எல்லாச் சத்திரங்களிலும் 8,68625 சாப்பாடுகள் போடப் பட்டிருக்கின்றன.

21. டிராம்வே:—தஞ்சாவூருக்கும் திருவாதிக்கும் எலெக்டரிக் டிராம்வேபோடுவதற்குப்பாரி கம்பெனியார் சென்ற மார்ச்சு மாதத்தில் ரோட்டுகளை அளந்து என்ன செலவாகுமென்பதைக் கணித்துக்கொடுத்தார்கள். அவர்களிடமிருந்து பிளான்களும் மதிப்புத்திட்டங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. கிராம ரோடுகளைப் புதிதாக அமைக்க தாலூகாபோர்டாரிடம் 35000 ரூபா கொடுக்கப்பட்டது.

22. ஸிவில் ஒர்க்ஸ்:- இந்தத் தலைப்பில் மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை 499,101 ரூபா. ரோடுகளுக்குச் செலவிட்ட தொகை 3,76,403 ரூபா (புது ரோடுகளுக்கு 72687 ரூபாயும், பழையரோடுகளுக்குப் பழுதுபார்க்க 3037 ரூபாயும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ரோடுகளின் நிலை சுமார் 25 மைல் சுற்றளவுக்குத் திருப்திகரமாயிருககிறது. அதற்கப்பாலுள்ள ரோடுகள் திருப்திகரமாயில்லை. ஜில்லா போர்டில் மண் ரோடுகள் 1452 மைல்கள் நீளமிருக்கின்றன. இவைகளுக்குச் செலவிட்ட தொகை 86278 ரூபாவாகும். மண்ரோடுகள் திருப்திகாமாயில்லையென்று எங்கும் குறைகூறப்படுகிறது. இதற்குக் காரணம் ஜில்லாபோர்டு இஞ்சினீர் அடிக்கடிபோய் பார்க்காததேயாகும். மணல்ரோடுகளுக்குக் கொஞ்சம் மண்ணையும் கூடச்சேர்த்து அங்கிருக்கும் குண்டுகுழிகளை அவ்வப்போது பழுதுபார்க்காததாகும்.

23. சுவாமிமலையிலும் நாச்சியார் கோயிலிலும் வைத்தியசாலைகள் ஏற்படுத்த கல்கத்தா மிஸ்டர் என் ஆர் ஐயர் அவர்கள் பத்தாயிரம் ரூபா கொடுத்திருக்கிறார்கள். பிறகு மிஸ்டர் கே. பி இராமநாதய்யர் கூத்தூர் என்னும் தமது கிராமத்தில் ஒரு எலிமெண்டரி பாடசாலை ஏற்படுத்த 2000 ரூபா உதவி செய்திருக்கிறார்கள்.

தஞ்சை ஜில்லாவில் யூனியன் பஞ்சாயத்துகள்.

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள யூனியன் பஞ்சாயத்துகளின் 1919--20ம் வருஷத்திய ரிபோர்ட் வெளியாயிருக்கிறது. அதிலிருந்து சில அம்சங்களை ஈண்டுக்குறிப்பிடுகிறோம்:—

சென்ற வருஷத்திற்கு முந்திய வருஷத்தில் எவ்வளவு பஞ்சாயத்து சபைகளிருந்தனவோ அவ்வளவு சபைகள்தான் பிரஸ்தாப வருஷத்திலும் இருந்தன. அதாவது 30 யூனியன் பஞ்சாயத்துகளாகும். இவைகளில் பத்து மேஜர் பஞ்சாயத்துகள்; 20 மைனர் பஞ்சாயத்துகளாகும். நாகப்பட்டினம் தாலுக்காவிலுள்ள அந்தணப்பேட்டையை யூனியனாக ஏற்படுத்தவேண்டுமென்று உத்திரவு கொடுக்கப்பட்டது. ஆனால் 1920ம் வருஷம் எப்ரல் மாதம்தான் வேலை தொடங்கப்பட்டது. திருவாதி, பாபநாசம், சீர்காழி, பட்டுக்கோட்டை,

அதிராம்பட்டினம் யூனியன்கள் உத்தியோகஸ்தரல்லாத பிரிஸிடென்டைத் தெரிந்தெடுத்துக்கொண்டன. 30 பஞ்சாயத்துகளுமாகச் சேர்ந்து மொத்தம் 377 கூட்டிங்கள் கூட்டின. ஆனுல் 1918 19ம் வருஷத்தில் 415 மீட்டிங்குகள் கூட்டப்பட்டன. படிக்குப்பாதி மெம்பர்கள்தான் கூட்டங்களுக்கு விஜயமானுர்கள். மெலட்டூர், அம்மாபேட்டை, திருவிலன்சுழி, குத்தாலம், வைத்தீஸ்வரன்கோவில். தலநாயர், ஒரத்தநாடு, அரந்தாங்கி முதலிய விடங்களிலுள்ள மைனர் யூனியன்கள் சட்டப்படி மாதாமாதம் கூட்டம் கூட்டவில்லை. இந்த விஷயம் அந்தந்தயூனியன்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக பஞ்சாயத்து சபைகளின்வேலைகள்திருப்திகரமாயிருக்கின்றன.

பணநிலை:— 1919ம் வருஷம் எப்ரல் முதல் தேதி 23729 ரூ கையிருப்பிலிருந்தது. இவைகளினின்று வருவாய் 73724 ரூபாய். செலவு 76,806. வருஷ முடிவில் 20647 கையிருப்பிலிருந்தது. 10488 ரூபா மேஜர் யூனியன்களுக்குச் சொந்தம். 10159 மைனர் யூனியன்களுக்குச் சொந்தமானது.

ஜில்லா போர்டு கூட்டம்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

கனம் வி. கே. இராமானுஜாச்சாரியார் அக்கிராசனம் வகித்தார்.

---

1. இம்மாதம் 5ந்தேதி மாலை மூன்று மணிக்குத் தஞ்சாவூர் கலெக்டர்ஆபீஸ் கட்டிடத்தில் தஞ்சை ஜில்லா போர்டு கூட்டம் கூடியது. உத்தியோகஸ்தரல்லாத பிரஸிடென்டான கனம் வி. கே. இராமானுஜாச்சாரியார்அக்கிராசனம்வகித்துக்கூட்டத்தை நடத்தினுர். மெஸர்ஸ் வைஸ் பிரஸிடென்டான எ. ஜெ. கிங், கனம் அகமத்தம்பி மரைக்காயர், வல்லம் ராஜா முகமத் ராவுத்தர், சேதுராமய்யர், சுப்பிரமணிய ராவு, ஏ. வி. ராமய்யா நாயுடு, புதுவயல்விசுவநாதன் செட்டியார், பஞ்சாபகேச ஐயர், ஸதாசிவ கண்டியார், ஸ்ரீநிவாஸபிள்ளை, எஸ் நடேசய்யர், கே. எஸ். வேங்கடராமய்யர், கபிஸ்தலம் முத்தையா மூப்பனுர், வேணுகோபால் நாயுடு, கோபாலசாமி உடையார், மன்னுர்குடி, மாயவரம், நாகப்பட்டணம் டிவிஷனல் ஆபீஸர்கள் முதலியோர் விஜயம் செய்திருந்தார்கள்.

1919—20ம் வருஷத்திய போர்டின் நிர்வாக ரிப்போர்ட்படிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டபிறகு அடியிற் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

நிலவிற்பனையும் சாசனம் ரத்துசெய்தலும்.

பட்டுக்கோட்டை தாலூகா விளாங்குளம் கிராமம் சர்வே நம்பர் 200,1-ல் உள்ள டிபார்ட்மெண்டால் ஏலமெடுக்கப்பட்ட ஏகர் 1 செண்டு 33 நஞ்சை நிலத்தின் குடிக்காணி பாத்தியதையை ஏலம் போடுவதற்குச் சாங்கிஷனைக் கோரிய 13—7—20உயுள்ள ச. டி. கலெக்டர் அவர்களுடைய R. C. 1176 Gl. of 20 ஆபீஸ் குறிப்பு படிக்கப்பட்டது.

குறிப்பு:— ஒரு ஏகர் நிலத்தின் குடிக்காணி பாத்தியதையின் பொறுமான விலை ரூ 50.

2. தஞ்சாவூர் தாலூகா கீழ் சித்தாக்காடு கிராமம் சர்வே நம்பர் 31/1, 85/2, 35/5, 32/2, 36, 36, 38, 39/1, 39/2, 40/1, 40/2, 42/2 & 42-3 இவைகளில் உள்ள ஏக்கர் 11 செண்டு 16 நஞ்சை நிலமும் ஏகர் 56 செண்டு 74-ன் குடிக்காணி பாத்தியதையை ஏலம்போட சாங்கிஷனைக் கோரிய 16—7—20 தேதியுள்ள ச. டி. கலெக்டர் அவர்களுடைய R. C. 958 Petn of 18 ஆபீஸ் குறிப்பு படிக்கப்பட்டது.

குறிப்பு:— ஒரு ஏகர் புஞ்சை நிலத்தின் குடிக்கான பாத்தியதையை பொறுமான விலை ரூ. 50 ஷை 1 ஏகர் நஞ்சை நிலத்தின் பொறுமான விலை ரூ. 100.

3. 1—2—19-ல் D. B. R. No. 4-ல் அம்மாபட்டணம் மகமெட் அப்துலால் என்பவன் பேரால் மணமேல்குடி கிராமம் ஸர்வே நம்பர் 203-1-ல் உள்ள ஏகர் 1 செண்டு 32 ஐ அடமானம் செய்ததை ஷையான் பட்டா முச்சலிக்கா மாற்றிக்கொள்ளமறுதளித்துவிட்டபடியாலும் ஷை அடமானத்தை ரத்துசெய்யும்படியாய் பசலி 1329 முதல் அவனுடைய நிலங்களிலிருந்து ஷை நிலத்தை ஒதுங்கிவிடலாமென்றும் சிபார்சு செய்கிற 12-7-20உயுள்ள ச. டி. கலெக்டருடைய R. C. 1181 Gl. of 20 ஆபீஸ் குறிப்பு படிக்கப்பட்டது.

கணக்கிலிருந்து ரந்துசெய்தல்.

4. சாவியாகிவிட்டதனுல் குறைந்துபோன கலம் 9—1—4யும் ஒரத்தநாடு சத்திரம் கணக்கிலிருந்து தள்ளுபடி சாங்கிஷனைக்கோரிய 1-7-20உயுள்ள டிப்டி கலெக்டருடைய R. C. 465 Petn of 20 ஆபீஸ் குறிப்பு.

குறிப்பு:— குறைந்துபோன நெல்லானது சாங்கிஷன் பண்ணிய 100க்கு இரண்டு கலத்திற்கு மேல் அதிகப்படவில்லை.

5. பட்டுக்கோட்டை தாலூகா சத்திரம் விளாங்குளம் 2-ம் 40 நம்பர் ரயதாகிய ராமாயி என்பவளால் 1325-ம் பசலிக்குக் கொடுக்கப்படவேண்டிய கிஸ்தி ரூ. 62—9—1யும் வசூலிக்கப்படமுடியாதென்று தள்ளுபடிசெய்ய சாங்கிஷனைக் கோருகிற ச. டி. கலெக்டர் அவர்களுடைய 17-7-20 தேதியுள்ள R. C. 1349 Gl. of 19 ஆபீஸ் குறிப்பு.

தீர்:— தள்ளுபடி சாங்கிஷன் செய்யப்பட்டது.

V. செலவுசெய்ய உத்திரவு.

6. அம்மா சத்திரத்திற்காக அடியில்கண்ட இரண்டு திட்டங்களை அனுப்பி சாங்கிஷனைக்கோரிய 11—7—20உயுள்ள ச. டி. கலெக்டர் அவர்களுடைய R. C. No. 1139 Gl. of 20 ஆபீஸ் குறிப்பு.

1. பாத்திரங்கள் வாங்க	ரூ 13—8—0
2. பாத்திரங்கள்ரிப்பேர்செய்ய	ரூ 36—0—0
	ரூ 39—8—0

தீர்:— ஷை சத்திரத்திற்கு பாத்திரங்கள் வாங்கவும் ரிப்பேர் செய்யவும் உள்ளஐவேஜியிலிருந்து சாங்கிஷன் செய்யப்பட்டது.

7. பாபநாசம் யூனியன் சர்வே விஷயமாய், சர்வே டிப்டி டைரக்டரிடமிருந்து வந்த நோட்டுக்களைப் பரிசோதனை செய்வதற்காக ஷை யூனியனின் சம்பந்தப்பட்ட கிராமங்களின் ஸர்வெ படங்களை வாங்குவதற்கு ரூ 15-க்கு சாங்கிஷனைக் கோரிய 25—3—20உயுள்ள D. B இஞ்சினியரிடமிருந்து வந்த R. C. 179 நெ. கடிதம் படிக்கப்பட்டது.

தீர்:— சாங்கிஷன் செய்யப்பட்டது.

8 தஞ்சாவூர் சப்-கோர்ட்டு 1919-வது வருஷத்திய S. C. No. 1360-ல் வாதிக்குச் சேரவேண்டியதொகை ரூ 44-4-0-ம் தஞ்சாவூர் (தெற்கு) 3 நெ. ரோட்டு பாதுகாப்பதற்காக இருக்கும் பாக்கி ஐவேஜியிலிருந்து கொடுக்க சாங்கிஷனைக் கோரிய 2—7—20உயுள்ள D. B. இஞ்சினியருடைய R. C. நெ. 432 L. W. of கடிதம் படிக்கப்பட்டது.

தீர்:— உத்தரவு செய்யப்பட்டது.

9. மிருக ஆஸ்பத்திரியின் உபயோகத்திற்காகப் பின்வரும் சாமான்களை வாங்க சாங்கிஷனைக் கோரிய மிருகவைத்திய ஆஸ்பத்திரி ஸர்ஜினிடமிருந்து வந்த R. C. நெ. 82, 84 கடிதங்கள் படிக்கப்பட்டன.

(1) 6 தித்தநாக பக்கட்டுகள்.
(2) ரூ 5—8—0 பெறுமானமுள்ள மர பக்கெட்டும் கயிறும் சாங்கிஷன் செய்யப்பட்டது.

10. ராஜா மராட்டா எலிமெண்டரி ஸ்கூலின் உபயோகத்திற்கு ரூ 135—5—0-க்கு 20 பலகைகள் வாங்கியதற்கு சாங்கிஷனைக் கோரிய ச. டி. கலெக்டர் அவர்களுடைய 15—7—20உயுள்ள R. C. 333 Gl. of 19 ஆபீஸ் குறிப்பு.

குறிப்பு:—செலவை இதனடியில் கண்ட இனங்களிலிருந்து செய்துகொள்வது.

1. பட்ஜட் ஐவேஜி	ரூ 50—0—0
2. எதிர்பாராத செலவுக்கு உள்ள ஐவேஜியிலிருந்து	ரூ 85—5—0
	ரூ 135—5—0

தீர்:— சாங்கிஷன் செய்யப்பட்டது.

(இன்னும் வரும்).

மஹத்வமுள்ள மஹானுல் கிடைத்த

"அருமையான மூலிகையும் தாயத்தும்"

குஷ்டம், க்ஷயம், மூலம், கிருணி, பிரம்மை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு,மூத்திர வியாதி முதல் நாள்ப்பட்ட எந்த விதமான வியாதிகளும் பலவித கவலைகளும் கஷ்டங்களும் உடனே நீங்கும். புத்திரபாக்கியம் உண்டாகும். வேண்டியவர்கள் பதிலுக்கு (ஸ்டாம்பு) வைத்து அனுப்பவும். அடுத்த தபாலில் சகல விபாமும் கிடைக்கும். எந்த தேசத்து (ஸ்டாம்பும்) அனுப்பலாம்.

எஸ். ஏ. கே. பிள்ளை,
மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா.

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yellaiamman koil Street, Tanjore.